விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 272 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 31 ஞாயிற்றுக்கிழமை (17.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## வடக்கு - கிழக்கு பௌத்த மயமாக்கல் இனங்களிடையே வன்முறையாகும்

### 6 புலம்பெயர் தமிழ் அமைப்புகள் எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழ் மக்கள் செறிந்துவாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல இடங்களில் இடம்பெற்று வரும் தீவிர பௌத்தமயமாக்கலை ஆவணப்படுத்துவதற்கு ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் தவறியிருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள், அரச கட்டமைப்புக்களின் ஆதரவுடன் சட்டவிரோதமாக முன்னெடுக்கப்பட்டுவரும் இத்தகைய நடவடிக்கைகள் இனங்களுக்கு இடையிலான வன்முறையாக நிலைமாற்றமடையக் கூடும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளன.

19

புதுக்குடியிருப்பில்

## அழுகிய நிலையில் ஆணின் சடலம் மீட்பு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பகுதியில் அழுகிய நிலையில் ஆணொருவரின் சடலம் ஒன்று நேற்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் வசிக்கும் நபரொருவர் கடந்த புதன்கிழமை காணாமல் போயிருந்த நிலையில் இது தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு மேற்கொள்

19



இனப் பிரச்சினையைத் தீர்க்க

13 ஐ அமுலாக்கி

# சரியான சந்தர்ப்பம் அமைந்துள்ளது

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

**13ஆவது திருத்தச் சட்டத்தை அமுலாக்கி இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கு தற்போது சரியான சந்தர்ப்பம் அமைந்துள்ளது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறே தமிழ்த் தலைவர்கள் கோருகிறார்கள். தற்போது 13 ஐ நிறைவேற்ற வேண்டும் என ஜனாதிபதியும் கூறுகிறார். 13 ஐ நடைமுறைப்படுத்த வேண்டிய உண்மையான தேவை ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ளது.


இது தொடர்பில் சிறந்த புரிந்துணர்வும் அவருக்கு உள்ளது.

இந்தப் பிரச்சினை தொடர்பில் நான் பேச வேண்டும். எனது வாழ்வில் இந்த பிரச்சினைக்காக பாரியளவில் அர்ப்

04

## சனல் 4 ஆவணப்படம் ஆராயப்பட வேண்டும்

### அமெரிக்கத் தூதுவரிடம் எம்.ஏ.சுமந்திரன்



(கொழும்பு)

சனல் 4 ஆவணப்படம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட வேண்டும் என அமெரிக்கத்

19

## தியாகி திலீபனின் ஊர்தியை இடைமறித்து ஆர்ப்பாட்டம்

### அக்கரைப்பற்றில் பதற்றம்

(அம்பாறை)

"தியாக தீபம்" தீலீபனின் உருவப்படம் தாங்கிய வாகன ஊர்தியை அக்கரைப்பற்றுப் பகுதியில்

19



## நாட்டின் பொருளாதாரம் எதிர்காலத்தில் தனியார் துறையினரால் இயக்கப்படும்



### இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க

(கொழும்பு)


நாட்டின் பொருளாதாரம் எதிர்காலத்தில் தனியார் துறையினராலேயே இயக்கப்படும். அரசாங்கம் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையாக மாத்திரமே செயற்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

"பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதில் அரசாங்கம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

ஆனால் நாம் இன்

04

## பூநகரியில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு



(பூநகரி)

பூநகரியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று பூநகரி நல்லூர்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் இரணைப்பாலை புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சந்திரசேகரம் மிதுஜன் (வயது-29) என்ற இளை

19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்பு

**சுன்னாகத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்துக்கு (Computer Billing) செய்யக்கூடியவர்கள்/ பழக விரும்புபவர்கள் தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.**

(17105)

**ஆண்கள் மட்டும்**

**தகைமை:**
அடிப்படை கணினி அறிவு அவசியம்
வயதெல்லை : 20 - 30 வயது வரை

**076 540 4630**


## மொத்த உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சி

இந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டில், மொத்த உள்நாட்டு உற்பத்தி கடந்த ஆண்டை விட 3.1 சதவீதம் குறைந்துள்ளதாக தொகைமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் கைத்தொழில் துறையில் 11.5 சதவீதமும் சேவை துறையில் 0.8 சதவீதமும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

எனினும், வேளாண்மை துறையில் 3.6 சதவீத வளர்ச்சியை பதிவு செய்துள்ளதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், குறித்த காலப்பகுதியில் நிதித்துறை 18.8 சதவீதமும், தகவல் தொழில்நுட்ப சேவைகள் 8.5 சதவீதமும், தொலைத்தொடர்பு சேவைகள் 4.4 சதவீதமும், சுகாதார சேவைகள் 2.6 சதவீதமும் குறைந்துள்ளதாகவும் தொகைமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7)


## கார் விற்பனைக்கு

நெல்லியடி திருமகள் சோதி வீதியில் GN... தொடர் இலக்கத்தைக் கொண்ட NISSAN MARCH கார் விற்பனைக்குண்டு (C-7266)

**077 429 0116**

## Romania வேலைவாய்ப்பு விசா

**Romania** நாட்டில் **Electrician** மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புக்கள் உள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவிற்குமான Tour Visa தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ளவும்.

**Hybrid International hub (pvt) Ltd, Jaffna**

(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்) (C-7260)

**021 222 1265, 076 250 0098**

## இலவச Taxi Meter

நீங்கள் உங்கள் வாகனங்களுக்கு Pickme Taxi Meter இல் இணைக்க அழைக்கவும்.
(முச்சக்கர வண்டி / CAR / VAN / மோட்டார் சைக்கிள்) (17115)

**077 473 7737**

## Spoken English with Grammar

- G.C.E O/L English Language
- Grade 9 to 11
- Personal and Group Class

(17108)

**Genius Institute**

No.184, A ,Navalar Road,Jaffna

**076 387 1033**


## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க உறுப்பினரும் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனை, வவுனியா பிராந்திய தொழில்நுட்ப உத்தியோகத்தருமாகிய திரு.க.குலச்செல்வன் அவர்களின் பாசமிகு தந்தை

**அமரர் சின்னட்டி கனகையன்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(17012)

**இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம் - வடமாகாணம்**


## காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு ஸ்ரேசன் வீதியில் (காளி கோயிலுக்கும் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கும் இடையில்) 1 1/2 பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு. (17096)

**077 728 6061**

## பணிப்பெண் தேவை

தொண்டைமானாறு பகுதியில் அமைந்துள்ள வீட்டைப் பராமரிக்கக் கூடிய பணிப் பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம் (17104)

**070 610 7801**


## மரண அறிவித்தல்

தோற்றம் 05 – 10 – 1949



மறைவு 16 – 09 – 2023

### திருமதி சுப்பிரமணியம் இராஜகாந்தம்(நிதி)

கொட்டடியைப் பிறப்பிடமாகவும் முஸ்லீம் கல்லூரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் இராஜகாந்தம்(நிதி) அவர்கள் நேற்று 16.09.2023 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சண்முகம் ஆச்சிக்கண்ணு தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் ரூபனதாஸ்(ரூபன்), சுகுணதாஸ்(சுதா), ஜீவனதாஸ்(கேவா-பிரான்ஸ்), சுதாசினி(சீத்தா), ராதா, சுசில்குமார்(சுமன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பிறேமா(கோமளா), ஜெமிலாராணி(ராஜா), ரதீஸ்(ரதி), விஜயராஜா(அத்தான்), ஜெயராஜா(ஜெயா), சயூர்த்தா(சியூ) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பபில்தேவ்(பபில்), தவச்செல்வி(அனித்தா), மயூரேசன், லிகான்சியா, அபிரேஷன், உஷானியா, அகிஷாயினி, தக்ஷிகா, அனோஜன், அனிஸ்ரன், அனிஸ்ரா, நிருஷிகா, நிருஷிகன், கருஷிகன், அஸ்வினா, கேஷானி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான தேவபரம்(வவா), சந்திராதேவி (சின்னமம்மி), கமேந்திராதேவி(கிளி) மற்றும் கனகராஜேஸ்வரன்(அருமை), நாகேந்திராதேவி(லலிதா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நடராசா, நல்லையா, தவத்துரை, செல்வநாயகம் மற்றும் புஸ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சரஸ்வதி காலஞ்சென்றவர்களான ஞானம் இராசரத்தினம்(வேவி), பரஞ்சோதி(பரத்தான்), மகாலிங்கம்(மகான்) மற்றும் (தர்மு), பரமேஸ்வரி, பஞ்சலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் அபூர்வனா, தன்ஷிகா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 17.09.2023 இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**077 670 1457, 077 615 3238**
**(மருமகன்கள்)**

(17101)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 20 – 06 – 1941



இறப்பு 13 – 09 – 2023

### திருமதி சிவதாசன் பரிமளம்

பத்தமேனி அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவதாசன் பரிமளம் அவர்கள் 13.09.2023 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம் - பார்வதி தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற சிவதாசன் அவர்களின் அன்பு மனைவியும் ஜெயமளா, சியாமளா, நிமலதாசன், கோமளா, பரிதாசன், கிருஸ்ணதாசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் விக்னேஸ்வரன், சிவகுமார், வினோதினி, ஆயிசா, நிரஞ்சன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற இராசாத்தி மற்றும் பரமேஸ்வரி, புஸ்பராணி சிவசிதம்பரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான முத்தையா, கதிரேசு, பாலசுப்பிரமணியம், சரவணபவான், ஜெயசீலன், செல்வராணி மற்றும் பரராசசிங்கம், புஸ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சாருஜன், கனுஜன், விதுஜா, நிரூஜா, டினோஜன், வனஜா, தினேஸ், அஞ்சனா, திவாணன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அர்னுஜன், நைனிக்கா, அபிநயா, அக்சஜா, அர்னிஸ், ஆருத்தி ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (17.09.2023) இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தீர்த்தாங்குளம் உல்லிவிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(17111)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
21 - 04 - 1940

மறைவு
15 - 09 - 2023

# ஆறுமுகம் வேலாயுதம்

## (மனேச்சர் - ஒலுமடு)

யாமாலை சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் ஒலுமடு மற்றும் தொல்புரம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் வேலாயுதம் அவர்கள் நேற்று முன்தினம் (15.09.2023) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் நமசிவாயம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் செல்லத்துரை இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயந்தினி (யேர்மன்), ஜெயசுதன் (லண்டன்), சுகந்தினி (அமெரிக்கா), ஜெயவிஜிதன் (பொறியியலாளர் - அமெரிக்கா), ஜெயகாந்தன், ஜெயடினேஸ் (வைத்தியக் கலாநிதி - அவுஸ்ரேலியா), நிஷாந் (ஆசிரியர் - கிளி/கண்ணகையம்மன் வித்தியாலயம்), டிசெந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கணேசமூர்த்தி (யேர்மனி), சாமினி (இலண்டன்), சின்னையா (பொறியியலாளர் - அமெரிக்கா), சுபாஜினி (அமெரிக்கா), ஸ்ரீரதி (நீர்ப்பாசனத் திணைக்களம் - வட மாகாணம்), சிந்தியா (அவுஸ்ரேலியா), போஜினி (தேசிய சேமிப்பு வங்கி - சங்கானை), பிரியங்கா (லண்டன்) ஆகியோரின் பிரியமான மாமனாரும் கஜனி (குவைத்), மிதுஷா, கோவர்த்தன், லக்ஷனா, திவியா, பிரவின், ஜெருஷா, சிவன், குகன், கணன், அபிஷா, ஆரியா, யுதாஜித், ஆதித், தியா, ஆராதியா, ஹரிஜித், சேருஷாந் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

விக்ரோறியாக் கல்லூரி முன் ஒழுங்கை,
தொல்புரம் மேற்கு, சுழிபுரம்

தகவல்:- குடும்பத்தினர்
021 225 0511, 077 994 7442, 077 487 1176

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 ஆவது தடவையாக ஆசியக் கிண்ணத்தை வெல்லுமா இந்தியா?




16 ஆவது ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி கடந்த 30 ஆம் திகதி தொடங்கியது. 6 நாடுகள் பங்கேற்ற இந்தப் போட்டியில் "லீக்" முடிவில் ஆப்கானிஸ்தான், நேபாளம் அணிகள்வெளியேற்றப்பட்டன.


இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்காளதேசம் ஆகிய 4 நாடுகள் சூப்பர் 4 சுற்றுக்கு முன்னேறின.

"சூப்பர் 4" சுற்று ஆட்டங்கள் முடிவடைந்த நிலையில் இந்தியா, இலங்கை அணிகள் முதல் 2 இடங்களை பிடித்து இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன.

வங்காளதேசம், பாகிஸ்தான் அணிகள் வெளியேற்றப்பட்டன. இறுதிப் போட்டி கொழும்பு பிரேமதாசா ஸ்டேடியத்தில் இன்று நடைபெறும்.இதில் ரோகித் சர்மா தலைமையிலான இந்தியா-தசுன் ஷனகா தலைமையிலான இலங்கை அணிகள் மோதுகின்றன.

இந்திய அணி இலங்கையை வீழ்த்தி 8 ஆவது முறையாக ஆசிய கிண்ணத்தை வெல்லுமா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.இலங்கை அணி 7 ஆவது முறையாக ஆசிய கிண்ணத்தை வெல்லும் வேட்கையில் இருக்கிறது. (நி)

# கோலியின் ஓவியத்தை வரைந்து பரிசளித்த இலங்கை ரசிகை



இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோலிக்கு உலகம் முழுவதும் ஏராளமான ரசிகர்கள் உள்ளனர். தற்போது நடந்து வரும் ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியின் போது பாகிஸ்தான் ரசிகை ஒருவர் விராட் கோலியை பாராட்டிய வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி இருந்தது.

இந் நிலையில் இலங்கை பெண் ரசிகை ஒருவர் விராட் கோலி மீதான தனது அன்பை புதுமையான முறையில் வெளிப் படுத்திய வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

வங்க தேசத்திற்கு எதிராக இந்தியா மோதும் ஆட்டத்திற்கு இந்திய வீரர்கள் தயாராகிக் கொண்டு இருந்த வேளையில் கொழும்பை சேர்ந்த இளம்பெண் ஒருவர் விராட் கோலியை சந்தித்துள்ளார்.

மேலும் அந்த பெண் ரசிகை தான் வரைந்த விராட் கோலியின் ஓவியத்தை அவ ருக்கு பரிசாக கொடுத்தார். அந்த ரசிகையின் பரிசை பெற்றுக்கொண்ட கோலி அவருக்கு நன்றி தெரிவித்தார்.

இதே போல ஏராளமான இலங்கை ரசிகர்களும் கோலியுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டனர். இந்த புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. (நி)

# உலகக்கிண்ண போட்டிக்கான ஆப்கான் அணி வீரர்கள் அறிவிப்பு

இந்தியாவில் 50 ஓவர் உலகக் கிண்ண தொடர் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் நடைபெற உள்ளது.

இந்த தொடரில் இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா உள்ளிட்ட 10 அணிகள் கலந்து கொள்கின்றன. உலக கிண்ண தொடரின் தொடக்க ஆட்டத்தில் இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகள் அகமதாபாத்தில் மோத உள்ளன.

இந்நிலையில், உலக கிண்ண தொடருக்கான ஹஷ்மதுல்லா ஷாஹிதி தலைமையிலான ஆப்கானிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் அணி வீரர்களாக ஹஷ்மதுல்லா ஷாஹிதி , ரஹ்மானுல்லா குர்பாஸ், இப்ராஹிம் சட்ரன், ரியாஸ் ஹசன், ரஹ்மத் ஷா, நஜிபுல்லா சட்ரன், முகமது நபி, இக்ரம் அலிகில், அஸ்மத்துல்லா உமர்சாய், ரஷித் கான், முஜீப் ரஹ்மான், நூர் அகமது, பசல்ஹக் பரூக்கி, அப்துல் ரஹ்மான், நவீன் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். (நி-6)


# மரண அறிவித்தல்

## திருமதி சியாமளா விஜயஈஸ்வரன்



**தோற்றம்** 12.03.1956 **மறைவு** 16.09.2023

நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சியாமளா விஜயஈஸ்வரன் அவர்கள் நேற்று (16.09.2023) சனிக்கிழமை நல்லைக்கந்தன் திருவடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Dr.சோமசுந்தரம் (இளைப்பாறிய வைத்தியர்) - பத்மாவதி தம்பதிகளின் பாசமிகு ஏகபுதல்வியும் காலஞ்சென்றவர்களான முருகையா (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்) - நாகரெத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும் விஜய ஈஸ்வரனின் (இளைப்பாறிய படவரைஞர் - நீர்ப்பாசனத் திணைக்களம்) பாசமிகு மனைவியும் மற்றும் Dr.முரளிதரனின் (இளைப்பாறிய சிரேஷ்ட விரிவுரையாளர், Lawyer, Australia) அன்புச் சகோதரியும் சத்தியாவின் (கனடா) அன்பு மச்சாளும் யாழினி (ஆசிரியை - நல்லூர்), ஜனகன், யசோதரன் (முகாமைத்துவ உதவியாளர் யாழ்ப்பாண பிராந்திய காரி யாலயம் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை), ஜனனி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஶ்ரீசிவா (பொறியியலாளர் - Ideal Engineering Pvt Ltd), ரஞ்சித் (சவூதி - ஊரெழு) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஶ்ரீஜான்வியின் பாசமிகு பேர்த்தியும் மற்றும் விஜயராஜா (லண்டன்), விஜயராணி (லண்டன்), காலஞ்சென்ற விஜயநேசன் (லண்டன்), காலஞ் சென்ற விஜயசுந்தரி (இந்தியா), விஜய ஈஸ்வரி (பிரான்ஸ்), விஜயகுமார் (இளைப்பாறிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர் - நல்லூர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் - விஜயஈஸ்வரன்
மற்றும் குடும்பத்தினர்
077 020 0807 (கணவர்),
077 821 0139 (மகன்),
077 248 7237 (மகள்)

138/3, நல்லூர் கந்தசுவாமி கோவில்
வடக்கு வீதி,
(கோவில் வீதி)
நல்லூர், யாழ்ப்பாணம். (17113)


## சரியான...

பணித்துள்ளேன். இந்த விடயம் தொடர்பில் என்னை கொலை செய்தும் இருப்பார்கள்.

அரசியலமைப்பின் சட்டமாக காணப்படும் 13 ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறே தற்போது ஜனநாயக முறையில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட தமிழ் தலைவர்கள் கோருகிறார்கள். இருப்பினும் இதனை ஒரு புறம் தள்ளி வைத்துள்ளனர். அதனை ஏன் செயல்படுத்த முடியாது?

13 ஆம் திருத்தத்தை நடைமுறைப் படுத்த வேண்டுமானால் சில விடயங்கள் உள்ளன. அதனை நடைமுறைப்படுத்த விரும்புவதாக ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார். அதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் என்னிடமும் கேட்டுக் கொண்டார்.

அதற்கு எந்த ஒரு ஒத்துழைப்புகளையும் வழங்குவதற்கு நான் தயார் என கூறினேன். எனினும் அதனை தற்போது யார் நடைமுறைப்படுத்துவது? அனைத்து மாகாண சபைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

13 ஆம் திருத்தத்தை நடைமுறைப் படுத்த வடக்கு, கிழக்கில் குறைந்தது மாகாண சபைகளாவது இருக்க வேண்டும்.அதற்கு முதலில் மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும். அதனை ஏன் நடத்த முடியாது?

வடக்கு, கிழக்கில் மாகாண சபை தேர்தலை நடத்தினால் ஏனைய பகுதிகளிலும் சத்திமிடுவார்கள்.13 ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்தி இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு தற்போதைய நிலைமை போன்று இலகுவான சந்தர்ப்பம் இருக்காது.

படிப்படியாக வந்து நான் செய்ய முற்பட்டது சரியானது என தற்போது மக்களுக்கு புரிந்துள்ளது. இதற்கு அப்பால் சென்று புதிய அரசியலமைப்பு சட்டத்தை கொண்டு வந்தேன். இனப்பிரச்சினைக்கு முன்வைக்கப்பட்ட முக்கிய தீர்வு அது என முழு உலக [illegible] 2/3 பெரும்பான்மையை பெற 7 வாக்குகளே அன்று போதாமல் போனது.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அந்த 7 வாக்குகளை வழங்கவில்லை. நான் அதனை பலவந்தமாக கொண்டு வரவில்லை.

அவர்களுடன் 5 மாதங்கள் கலந்துரையாடியே கொண்டு வந்தேன்.கலந்துரையாடி இணங்கியே பிரதியை கொண்டு வந்தேன். அதற்கு வாக்களிக்கவில்லை.

அது மாத்திரமல்ல எனக்கு எதிராக கூச்சலிட்டு, அதனை தீயிட்டு கொளுத்தினர். தற்போதாவது அதனை நிறைவேற்ற வேண்டும் என அவர் கூறுகிறார். அது மிகப்பெரிய விடயமல்லவா? எனது நிலைப்பாட்டை கடுகளவேனும் மாற்றவில்லை. அவர் மாறியுள்ளார். இது சிறந்த விடயம் என்றார். (ம-7)

## நாட்டின்...

னும் நீண்ட தூரம் செல்ல வேண்டும்.

இந்த ஆண்டு இறுதிக்குள் பொருளாதாரத்தில் அதிக ஸ்திரத்தன்மை ஏற்படும். அந்த நேரத்தில் வரி நிர்வாக முறையை வலுப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

நாங்கள் அதைப் பற்றி விவாதம் செய்யலாம். இருப்பினும், நாங்கள் முதலில் பொருளாதாரத்தை உறுதிப்படுத்தி பலப்படுத்த வேண்டும்.

2023ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் இலங்கை தனது கடன் மறுசீரமைப்பு செயல்முறையை முடிக்க உத்தேசித்துள்ளது.

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஐ.எம்.எப் இன் முதல் மதிப்பாய்வு இடம் பெற்று வருகிறது. இது ஒரு நீண்ட மதிப்பாய்வாக இருக்கும்.

கிட்டத்தட்ட இரண்டு வாரங்கள் கலந்தாய்வுகள் நடத்தப்படும். ஜனாதிபதி இறுதிக் கூட்டத்தை 26 ஆம் திகதி (செப்டெம்பர்) நடத்துவார்" என்றும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விலை மீண்டும் அதிகரிப்பு?

(கொழும்பு)

**இம்மாத இறுதியில் மீண்டும் எரிபொருள் விலை அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு மற்றும் இந்தியாவுக்கு செலுத்தப்பட வேண்டிய கடன் தொகைக்கான அறவீடு உள்ளிட்ட காரணங்களால் இம்மாத ஆரம்பத்தில் இலங்கையில் எரிபொருள் விலை கணிசமாக அதிகரிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் இம்மாத இறுதியில் மீண்டும் எரிபொருள் விலை அதிகரிக்கப்படவுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் எரிபொருள் விலை பாரியளவில் அதிகரித்துள்ளது.

அதேவேளை, கடந்த மாதம் 80 டொலருக்குள் இருந்த மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை தற்போது 90 டொலர்களை கடந்துள்ளது.

இம்மாத இறுதியில் மசகு எண்ணெய் விலை மேலும் அதிகரிக்கும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையிலும் அடுத்த மாத ஆரம்பத்தில் எரிபொருள் விலைகளை கணிசமாக அதிகரிப்பது குறித்து, எரிசக்தி அமைச்சு இப்போதே சிந்திக்க ஆரம்பித்துள்ளதாக அறிய முடிகிறது.

இதேவேளை எரிபொருள் விலை தொடர்பான தீர்மானம் இம்மாத இறுதி அமைச்சரவை கூட்டத்தின் போது எடுக்கப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

## தமிழகத்தில் உள்ள

# இலங்கை தமிழர்களுக்கு 1591 வீடுகள் கையளிப்பு

(சென்னை)

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் தமிழர்களுக்காக கட்டப்பட்டுள்ள வீடுகள் இன்று கையளிக்கப்படவுள்ளதாக தமிழக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தமிழகத்தில் 13 மாவட்டங்களில் 79.70 கோடி இந்திய ரூபா மதிப்பில் 1591 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

தமிழகத்தின் வேலூரை அண்மித்துள்ள மேல்மொனவூரில் உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் நடைபெறும் நிகழ்ச்சியில், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் பயனாளிகளிடம் வீடுகளை ஒப்படைக்க உள்ளார்.

மேலும், காணொளி வாயிலாக 13 மாவட்டங்களில் உள்ள 19 இலங்கை தமிழர் முகாம்களில் வசிப்போருக்கான வீடுகளை ஒப்படைக்கும் நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தமிழக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

வேலூர் மாவட்டத்தில் மாத்திரம் 11 கோடி இந்திய ரூபா மதிப்பில் 220 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் தமிழர்களுக்காக தமிழ்நாடு அரசு சார்பில் வீடு கட்டும் திட்டத்தை மாநில முதல்வர் மு.க. ஸ்டாலின் கடந்த 2021ஆம்ஆண்டு வேலூரில் தொடங்கி வைத்தார்.

வீடு கையளிக்கும் நிகழ்ச்சியில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் பங்கேற்று வீடுகளை கையளிப்பார். (நி)

# 17 இலட்சம் ரூபா பெறுமதியான சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

17 இலட்சம் ரூபா பெறுமதியான சிகரெட்டுக்களை கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக நாட்டுக்கு சட்ட விரோதமாக கடத்த முற்பட்டதாக கூறப்படும் இலங்கைப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

டுபாயில் இருந்து வந்த குறித்த பெண்ணிடமிருந்து 17 ஆயிரம் சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர் புத்தளம் பகுதி யைச் சேர்ந்த 55 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (நி)

# கோட்டாவின் வழியில் ரணில்

## சஜித் குற்றச்சாட்டு

(கொழும்பு)

உயித்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் உண்மை கண்டறியப்படும் எனக்கூறி ஆட்சிக்குவந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தகவல்களை மூடிமறைக்கும் முயற்சியிலேயே இறங்கினார்.

தற்போதைய ஜனாதிபதியும் அதேவழியில்தான் பயணிக்கின்றார் என எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சாட்டியுள்ளார்.

குண்டுத் தாக்குதலில் ஈடுபட்டவர்கள், பிரதான சூத்திரதாரிகளாக செயற்பட்டவர்கள்.

அதில் பொதிந்துள்ள அரசியல் இலக்குகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் உண்மை கண்டறியப்பட வேண்டும்.

அதற்காக வெளிப்படை தன்மையுடன் கூடிய சுயாதீன விசாரணை அவசியம்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பாராளுமன்றத்தில் இரு நாட்கள் விவாதம் இடம்பெறவுள்ளது.



இந்நிலையில், குண்டுத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முழுமையான அறிக்கையை அரசிடம் கேட்டபோது, வழங்க முடியாது எனக் கூறப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (நி)

# இராசிபலன்

17.09.2023
ஆவணி 31, ஞாயிற்றுக்கிழமை
துதியை முற்பகல் 10.35 மணிவரை
அத்தம் முற்பகல் 10.26 மணிவரை

சுபநேரம் -9.03-10.33 மணிவரை
இராகுகாலம்-4.33-6.03 மணிவரை
அமிர்த சித்தம்

சந்திராஷ்டமம்- பூரட்டாதி, உத்திரட்டாதி.

வளவன்

**மேஷம்** — பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகிவிடும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்** — உறவினர் நண்பர்களின் சந்திப்பால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**துலாம்** — பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், சுப விரயங்கள் கூடும் நாள்.

**மகரம்** — பகையொன்று நட்பாகலாம், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் கூடும்.

**ரிஷபம்** — எதிர்கால நலன் கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள்.

**சிம்மம்** — உறவினர்கள் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்** — பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**கும்பம்** — பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நல்லது, காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும் நாள்.

**மிதுனம்** — புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், நினைத்த காரியம் நல்லவிதமாக நடைபெறலாம்.

**கன்னி** — குடும்பத்தினர் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், மனிதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

**தனுசு** — உறவினர்கள் உங்களின் மனங்கோணாது நடந்து கொள்வர், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள்.

**மீனம்** — நிதிநிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும் நாள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்ப்படிதல் மட்டுமே கட்டளையிடும் உரிமையை அளிக்கும்.

# ஒரு கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருளுடன் முதியவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில், ஒரு கோடி ரூபாய் பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் 70 வயது முதியவர் ஒருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட முதியவரிடம் இருந்து, ஒரு கிலோ கிராம் 40 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வான் ஒன்றும் கைப்பற்றப்பட்டன.

யாழ்ப்பாணம் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 70 வயதுமிக்க ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-33)



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் முருகனின் திருக்கல்யாண நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது. (படம்:-சிவசாந்தன்)

# தியாக தீபம் திலீபனின் 2 ஆம் நாள் நிகழ்வுகள்







(அராலி)

தியாக தீபத்தின் இரண்டாவது நாள் நினைவேந்தலானது நேற்று நல்லூர் முருகன் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள தியாக தீபத்தின் தூபியடியில் நடைபெற்றது.

இதன்போது தியாக தீபத்தின் திருவுருவத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதன்பின்னர் தியாக தீபத்தின் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவினர், பொதுமக்கள் என இணைந்து அடையாள உணவுத் தவிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். (நி-104)

# தீர்மானங்களை எடுக்கக் கூடிய மனஉறுதி எம் மாணவர்கள் மத்தியில் இல்லை

## தொழில் வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் ஈஸ்வரன்

(சாவகச்சேரி)

தீர்மானங்களை எடுக்கக் கூடிய மனஉறுதி எம் மாணவர்கள் மத்தியில் இல்லை. அதனால் தான் வடக்கு மாகாணத்தில் இருந்து மூன்று பொறியியலாளர்களை இழந்து விட்டோம் என தென்மராட்சிக் கல்வி வலய தொழில் வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் க.ஈஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொடிகாமம் நட்சத்திர மஹாலில் இடம்பெற்ற மூச்சு குறுந்திரைப்பட ஆரம்ப நிகழ்வில் விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஈழத்தில் இருந்து குறும்படங்கள் வெளிவருகின்ற போதிலும் அதனை பலரும் விரும்பிப் பார்ப்பதில்லை. இந்தியாவில் இருந்து வெளிவரும் படைப்புக்களையே அதிகம் கொண்டாடுகின்றோம். குறும்படங்கள் ஊடாக சமுதாயத்திற்கு பல செய்திகள் கிடைக்கின்றன.

இந்த திரைப்படம் மற்றும் குறும்பட காட்சிகள் மக்கள் மனங்களில் இலகுவில் தொற்றிவிடக்கூடியன. எனவே குறும்படங்கள் ஊடாக மாணவர்களது மனங்களில் நல்ல செய்திகளை விதைக்க வேண்டும்.

இன்று மாணவர்கள் புத்தகப் படிப்பை மாத்திரமே நம்பி இருக்கின்றனர். ஆனால் அதனை பல்கலைக்கழகத்திலும் தொடர முடிவதில்லை. அதனால் தான் இந்த தற்கொலை முடிவை எடுக்கின்றனர். வடக்கு மாகாணத்தில் மூன்று பொறியியலாளர்களை அண்மையில் இழந்து விட்டோம். அடுத்த பரீட்சையை எப்படி எதிர்கொள்வது என்ற மனப் பயமே இதற்கு காரணம்.

சுயமான கற்றல் முறைமையை பாடசாலைக் கல்வியில் இருந்து தொடராததன் விளைவினை இன்று எதிர்கொள்கிறோம்.

இலங்கையின் முன்னாள் கல்வி அமைச்சர் அண்மையில், இலங்கையில் தொழில் வாய்ப்புகள் ஏராளம் காணப்படுகின்ற போதிலும் பலரும் அதற்கான திறன்களை கொண்டிருப்பதில்லை எனக் கூறியிருந்தார்.

இன்று சாதாரண தரம் சித்தியடையாவிட்டாலும் கூட உரிய தொழிற்பயிற்சி ஊடாக சிலர் தனியார் துறையில்கை நிறைய சம்பாதிக்கின்ற நிலையை காண முடிகின்றது. கல்வி வேறு அறிவு வேறு. அறிவினை எப்படியும் வளர்த்துக் கொள்ள முடியும் என மேலும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். (நி-30)

# பெற்றோல் குண்டுத் தாக்குதல் ஐவர் மருத்துவமனையில்

## இச்சம்பவத்திற்கு காதலே காரணமாம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள வீட்டுக்கு பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில், யுவதி உள்ளிட்ட அவரது குடும்ப உறுப்பினர்கள் ஐவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாவடி பகுதியில் உள்ள வீடொன்றின் மீது நேற்று சனிக்கிழமை பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தியதுடன், வீட்டின் ஜன்னல்கள், கதவுகள் என்பவற்றையும் அடித்து உடைத்து, வீட்டில் இருந்தவர்கள் மீதும் இளைஞன் ஒருவரின் தலைமையில் வந்த கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது. சம்பவத்தில் வீட்டில் இருந்த யுவதி ஒருவர் உள்ளிட்ட ஐவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காதல் விவகாரமே தாக்குதலுக்கு காரணம் எனவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. தாக்குதல் மேற்கொண்ட இளைஞனை அடையாளம் கண்டுள்ள நிலையில் அவரையும் அவருடன் தாக்குதலுக்கு வந்த ஏனையவர்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (நி-33)



மிருசுவில் தமிழ்த்தாசன் பத்தாவது வெளியீடான "பண்பாடுகள் படும்பாடுகள்" என்ற சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சாவகச்சேரி வடக்கு திருப்புகழ் மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்:-சுபேசன்)

# மனித உரிமைகள் தொடர்பான டிப்ளோமா கற்கை ஆரம்பம்

(சாவகச்சேரி)

சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படுகின்ற மனித உரிமைகள் தொடர்பான இலவச கற்கைநெறியின் ஆரம்ப நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றிருந்தது.

சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் இயக்குநர் சட்டத்தரணி அம்பிகா சிறிதரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் விருந்தினர்களாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் வடபிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ரஜீவன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

அத்துடன் நேர்முகத்தேர்வு வாயிலாக மனித உரிமைகள் கற்கைநெறிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள், சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலைய உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (நி-30)

# காலபோக கூட்டமும் உரமானிய பதிவும்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி மேற்கு விவசாய சம்மேளன பிரிவுக்குட்பட்ட விவசாயிகளுக்கான காலபோக கூட்டமும் உரமானிய பதிவும் 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிமுதல் 2 மணி வரை நாவற்குழி பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வருட ஏக்கர் வரிப்பண்ணத்துக்கான பற்றுச்சீட்டு, இவ்வருடத்துக்கான சந்தாப்பணம் கட்டிய பற்றுச்சீட்டு அடையாள அட்டை ஆகிய ஆவணங்களுடன் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 407
Viber 076 636 3378



# சர்வதேச விசாரணையே சரியான நீதியைத் தரும்!

**உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கு சர்வதேச விசாரணையைக் கோருபவர்கள் வன்னிப் பெருநிலப் பரப்பில் நடைபெற்ற போர் குற்ற மீறல்களுக்கான நீதியையும் பெற்றுத்தர முன்வர வேண்டும்.**

- அபிமன்யு -

அண்மையில் உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல் தொடர்பான காணொளி ஒன்று சனல் -4 வெளியிட்டிருந்தது.

தனது சொந்த நாட்டு மக்களையே தாம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக கொன்றுகுவித்து அந்தக் குருதி வழி வெற்றியை ருசித்தார்கள் ராஜபக்ஷக்கள் என சனல்-4 தனது ஆதாரத்தை ஆணித்தரமாக வலியுறுத்தியிருந்தது.

குறித்த காணொளி வெளியானதைத் தொடர்ந்து அது தொடர்பில் நாடே கொந்தளிக்கும் நிலையில் இருந்தது நாம் அறிந்த விடயமே.



சனல்-4 காணொளியின் பின் ராஜபக்ஷக்கள் மீது சர்வதேசம் விசாரணை செய்ய வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாஸ முதல் கொண்டு பல பெரும்பான்மைத் தலைவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

குறித்த காணொளி தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பில் யாரும் குழம்பத் தேவையில்லை. சனல்-4 வின் காணொளி ஜெனிவாவுக்கான நாடகம் எனத் தெரிவித்திருந்தார்.

2009 இறுதி யுத்தத்தில் இலங்கை இராணுவத்தினர், பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்றொழித்தனர். முள்ளிவாய்க்காலில் நடந்தது இன அழிப்பு என்பதற்கான ஆதாரங்கள் பல வெளியாகின. குறித்த ஆதாரங்களை வெளியிடுவதில் சனல்-4 நிறுவனம் பாரிய பங்காற்றியிருந்தது.

ஆயினும் குறித்த ஆதாரங்கள் அனைத்தும் பொய் எனவும் வன்னிப் பெருநிலப் பரப்பில் கொல்லப்பட்ட அனைவரும் பயங்கரவாதிகளே அங்கு போர்குற்ற மீறல்கள் எதுவும் நடக்கவில்லை எனவும் இலங்கை அரசு மறுத்து வந்தது.

ஆயினும் வருடா வருடம் ஐ.நா அமர்வில் வன்னி இறுதி யுத்தம் தொடர்பிலும் அங்கு நடைபெற்ற போர்க்குற்ற மீறல்களுக்கு நீதியான தீர்வு வேண்டும் என்றும் சர்வதேசம் வலியுறுத்தி வருவதும் அதை இலங்கை அரசு மறுத்து வருவதும் வழமையான விடயம் ஆகிவிட்டது.



இந்த நிலை கடந்த ஐ.நா அமர்விலும் தொடர்ந்தது என்பது தான் வேதனையான விடயம்.

தனது சொந்த நாட்டு மக்களையே கொன்றொழித்த அரசை விசாரணை செய்ய வேண்டும் என்பது சர்வதேசத்தின் விருப்பமாயினும் அதை நடை முறைப்படுத்துவதில் பின் நிற்பதற்குள் இருக்கும் அரசியல் தமிழ் மக்களுக்கு புரியாத புதிராகவே உள்ளது.

வன்னிப் பெருநிலப் பரப்பில் நடந்த போர்க்குற்ற மீறல்களுக்கான நீதி, காலம் தாழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையிலேயே சனல்- 4 உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான காணொளியை வெளியிட்டிருந்தது.

குறித்த காணொளி ராஜபக்ஷக்களின் கோர முகத்தை வெளிக்கொண்டு வந்திருந்தாலும் அது தமிழினத்துக்கு எந்த வகையிலும் பயன்அற்றதாகவே இருக்கிறது.

ஏனெனில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு சர்வதேச நீதி கோருபவர்கள் வன்னிப் போர்குற்ற மீறல்களுக்கு மௌனம் காத்தார்கள், மௌனம் காக்கின்றார்கள் என்பதுதான் மெய்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம் முள்ளிவாய்க்கால் போர்குற்ற மீறல்களை மறைத்துவிட்டது.

இதன் தாக்கம் எதிர்வரும் ஐ.நா அமர்விலும் எதிரொலிக்கும் என்பதை இங்கு கூறித்தான் ஆக வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலின் சூத்திரதாரிகள் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. அதில் மாற்றுக் கருத்துக்கு இடமேதும் இல்லை.

ஆனால் வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழினத்துக்கு நடந்த அநீதிக்கும் நீதி வேண்டும் . அதை சர்வதேசம் பெற்றுத்தர வேண்டும் என்பதே தமிழினத்தின் விருப்பம்.

அதை விடுத்து முந்தி வந்த செவியை பிந்தி வந்த கொம்பு மறைக்கும் செயலாய் வன்னிப்பெருநிலப்பரப்பில் நடைபெற்ற போர்க்குற்ற மீறல்களும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலும் அமைந்துவிடக் கூடாது.


இதில் நின்று, நிதானத்துடன் செயற்பட வேண்டியது சர்வதேசம் என்பதை இவ்விடத்தில் மீண்டும் மீண்டும் நினைவூட்டுவது காலத்தின் தேவையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

## கடமைப் பொறுப்பை சரிவரச் செய்த அபயசேகராவிற்கு ஆலடியில் பாராட்டு







**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். நல்லூர் மகோற்சவ காலத்தில வீதி ஒழுங்குபடுத்தல் தொடர்பில யாழ்ப்பாண மாநகர சபை இப்பவே ஒரு கூட்டத்தைக் கூட்டி, மக்களின்ர கருத்துக்களைக் கேட்க வேணும். மக்களின்ர கருத்துக்களைக் கேட்டறிந்து அதனை ஆவணப்படுத்தி அடுத்த முறைக்கு (2024) நேர்த்தியான ஒழுங்குபடுத்தலைச் செய்ய வேணும்.

அதோட நல்லூர்த் திருவிழாவில அடியார்கள் முருகனைத் தரிசித்துக் கொண்டிருக்கும் போது, ஒரு சில இளம் மட்டங்கள் அரோகரா எண்டு கத்தினபடி சங்கிலிக் கோர்வையாக ஆட்களை இடிக்கிறதோட, அந்த இடங்களில சனநெருக்கடியையும் ஏற்படுத்துகினம்.

இந்தக் கலாசாரம் காலாகாலமாக நடக்குது. சனங்களும் முருகன்ர சந்நிதியில என்னெண்டு கதைக்கிறதெண்டு மௌனம் காக்கினம்.

ஆனால் குறித்த இளம் மட்டங்களின்ர சேட்டை கூடிப் போயிற்றுது. இதுக்கும் அடுத்த முறை முடிவுகட்ட வேணும்.

**விதானையார்-** உண்மை தான். இந்த முறை நல்லூர் மகோற்சவ காலத்தில பொலிஸாரின்ர சேவை மிகவும் மந்தமாக இருந்தது. நல்லூர் மகோற்சவகால சேவைக்காக 400 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்ட போதிலும் அவர்களிட்ட வேண்டா வெறுப்புத்தனம் இருந்ததைக் காண முடிந்தது.

நல்லூர் முருகன் ஆலயத்திற்கு வருகின்ற வீதிகளில வாகன நெருசல் எண்டால் சொல்லிமாளா.

இருந்தும் பொலிஸார் அந்த இடத்திலேயே இருக்கவில்லை.

**கங்காணி-** இது தான் பொலிஸ் அதிகாரத்தை எங்களிட்டத் தாருங்கள் எண்டு கேட்கிறம்.

**மூப்பர்-** உண்மை தான். கண்டி தலதா மாளிகையில விழா எண்டால், பொலிஸார் இப்படி நிற்பினமோ. அப்ப பொலிஸாரிட்டயும் சிங்களம் - தமிழ் எண்ட பேதம் கடுமையாக வந்திட்டுது.

**வாத்தியார்-** அதுக்காக எல்லாப் பொலிஸாரையும் நாங்கள் குறை சொல்ல முடியாது. தங்கட கடமையை நேர்த்தியாகச் செய்கிற பொலிஸாரும் இருக்கினம் எண்டதை நாங்கள் மறந்து விடக்கூடாது.

நல்லூர் மகோற்சவத்தை ஒட்டி கடந்த சில நாட்களாக யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியும் பலாலி வீதியும் பிரிகின்ற சந்தியில மூன்று, நான்கு பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தினம்.

ஆனால், அந்த இடத்தில நிற்கின்ற பொலிஸில ஒருவர் மட்டும் போக்குவரத்தை ஒழுங்குபடுத்திறதில கண்ணும் கருத்துமாக ஈடுபட்டுக்கொண்டிப்பார்.

அவரின்ர சேவையால, அந்த வீதிகளில ஏற்படுகிற போக்குவரத்து நெருக்கடி இல்லாமல் பொது மக்களும் பாடசாலை மாணவர்களும் இலகுவாகத் தமது பயணத்தை மேற்கொண்டினம்.

அந்த இடத்தில போக்குவரத்து ஒழுங்குபடுத்தல் இல்லை எண்டால், குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் அண்டைக்கு அந்த இடத்தில கடமையில இல்லை எண்டது தான் பொருள்.

**சாத்திரியார்-** அது சரி வாத்தியார், அந்தப் பொலிஸாரின்ர பெயரைக் அறியல்லையோ?

இவ்வாறு சாத்திரியார் கேட்டதும் வாத்தியார் தன்ர ஸ்மாட்போனை எடுத்துத் தட்டினார்.

அவற்ற பெயர் டபிள்யு.ஏ.அபயசேகரா (W.A. Abeysekara) முல்லைத்தீவு முள்ளியவளை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவர்.

இது தான் அவற்ற படம் என்றவாறு, போனில் இருந்த படத்தை ஆலடியில இருந்தவர்களுக்கு வாத்தியார் காட்டினார்.

உண்மையில் கடமை உணர்வோட தங்கட வேலையைச் செய்கிறவர்களை நாங்கள் பாராட்ட வேணும்.

அந்த வகையில தன்ர கடமையை ஒழுங்காகச் செய்த டபிள்யூ.ஏ.அபயசேகரா என்ற பொலிஸ் உத்தியோகத்தரை ஆலடி மாநாடு பாராட்டுகிறது. இவ்வாறு வாத்தியார் கூறியதோடு ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது.

அமைதியைக் கலைக்க சிறாப்பர் கனகசபை குரல் கொடுத்தார்.

**சிறாப்பர்-**அது சரி. அம்மம்மா ஒருவர் தன்ர 12 வயதுப் பேர்த்தியை ஊசி மருந்து ஏற்றிக் கொன்றிருக்கிறாரல்லோ என்ன மாதிரி அந்தப் பிரச்சினை போகுது.

**கங்காணி-**என்ன செய்கிறது.குடும்பங்களில பிறழ்வு ஏற்படுகிற போது அந்தக் குடும்பங்களில இருக்கிற சின்னப்பிள்ளைகள்தான் பெரும் பாதிப்பை எதிர்கொள்ளுகினம் இந்தாப்பாருங்க,

இந்தச் சின்னப் பிள்ளையின்ர தாயும் மறுமணம் செய்து தந்தையும் மறுமணம் செய்ய, பிள்ளை பாட்டியிட்ட தஞ்சமடைந்திருக்குது.

வயதுபோன பாட்டிக்கு பிள்ளையின்ர எதிர்காலம், ஆரிட்ட பிள்ளையை ஒப்படைக்கிறது எண்ட யோசனை இருந்திருக்கும். கடைசியில எடுத்த முடிவால, அந்தப் பிள்ளையும் இறந்து பாட்டியும் சிறையில இருக்கிறதான நிலையும் வந்திட்டுது.

**விதானையார்-** எங்கட மண்ணில இப்ப குடும்பப் பிறழ்வுகள் தானே மலிந்து கிடக்குது.

வட மாகாணத்தில இருக்கிற ஒவ்வொரு நீதிமன்றிலும் விவாகரத்து வழக்குகள் மலிந்து போயிற்றுது.

அதிலும் இளம் பிள்ளைகள் விவாகரத்துக் கோரி நிற்கிறது தான் அதிகம்.

இந்த நிலையில அந்தக் குடும்பங்களில இருக்கிற சின்னப் பிள்ளைகள் என்ன செய்ய முடியும்.

**பண்டிதர்-**என்னவா இருந்தாலும் ஒவ்வொரு பிள்ளைகளின்ர விடயத்திலும் அந்தந்தப் பிள்ளைகள் படிக்கிற பாடசாலைகள் கவனமெடுக்க வேணும்.

தத்தம் மாணவர்கள் தொடர்பில வகுப்பாசிரியர்கள் கவனமெடுத்தால், பிறழ்வான குடும்பங்களை இனங்கண்டு, அந்தப் பிள்ளைகளை வழிப்படுத்தவும் ஆற்றுப்படுத்தவும் முடியும்.

தேவையாயின் சிறுவர் விடுதிகளில சேர்த்து விடவும் முடியும்.

ஆகையால இது தொடர்பில விழிப்புணர்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேணும்.

இவ்வாறு பண்டிதர் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எல்லோரும் சேர்ந்து நாட்டை நாசமாக்கி விட்டு இப்போது நாட்டைக் காட்டிக் கொடுக்க மாட்டார்களாமே?

**திகான் — வடமராட்சி**

**மனிதப் படுகுழிகள் மறுபடியும் மரணிக்காதா வியாசரே?**

எத்தனை தாய்மாரின் ஏக்கங்கள் மண்ணில் புதைந்து கிடக்கிறது தெரியுமா?
எத்தனை இலட்சியங்கள் மண்ணில் மறைந்து கிடக்கின்றது தெரியுமா?
எத்தனை தியாகங்கள் மண்ணில் மாண்டு போய்க் கிடக்கிறது தெரியுமா?
எத்தனை எதிர்பார்ப்புகள் மரணித்துக் கிடக்கிறது தெரியுமா?
எத்தனை உயிர்கள்? அத்தனையும் எம் சொந்தங்கள்?
அனைவரும் எமக்காக எமது சுதந்திரத்திற்காக மூச்செறிந்து மூடப்பட்டவர்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.
இவை அத்தனைக்கும் நீதி வேண்டும். அந்த நீதி உண்மையாய், நேர்மையாய் இருக்க வேண்டும் என்பதே தமிழினத்தினது விருப்பமும்.

**சுரேன் — பத்தமேனி**

**வீதியோரங்களில் பயன்தரும் மரங்களை நடுகை செய்தால் நன்மையல்லவா வியாசரே?**

உங்கள் திட்டம் நல்லது. ஆனால் அதை நடைமுறைப்படுத்துவது யார் என்பதுதானே கேள்வி.
வடக்கு மாகாண சபையின் அப்போதைய விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அவர்களினால் நாவற்குழி வெளியின் இரு மருங்கிலும் காட்டு மரங்கள் நாட்டப்பட்டு அவை பராமரிக்கப்பட்டு வந்தன.
வடமாகாணம் கலைக்கப்பட்டதன் பின்னர் அதை யாரும் கவனிப்பார் இல்லை.
ஆயினும் பெய்யும் மழைநீரில் ஓரளவு வளர்ந்திருந்த மரங்கள் தற்போதைய வறட்சி காரணமாக வாடும் நிலையில் உள்ளன.
இதற்கு யார் நீர் ஊற்றுவார்? இதை யார் கவனிப்பார்? இதுதான் இன்றைய எம்மவர்களின் நிலை.
தமக்கு தமக்கென்றால் படக்கு படக்கென்பார்கள். அவ்வளவு தான்.

**கனேஸ் — பருத்தித்துறை**

**ரஷ்யா விரையும் கிம் ஜாங் உன் கை கொடுக்கிறார். ரஷ்யா அதிபர் கை நீட்டுகிறார் இதுபற்றி?**

உலகில் இருந்து தன்னைத் தனிமைப்படுத்தி வைத்திருக்கிறது வடகொரியா.
அங்கு என்ன நடக்கிறது என்பதே தெரியவில்லை. மக்கள் துன்புறுத்தப்படுகிறார்கள் எனும் செய்தி உலகை உலுக்கும் செய்தியாக அமைந்தது.
அமெரிக்காவை வெளிப்படையாக எதிர்க்கும் வடகொரியா அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபடுவதாய் அமெரிக்கா குற்றம் சாட்டி வரும் நிலையில் ரஷ்யாவுக்கு ஆயுத உதவியை வழங்கியுள்ளது வடகொரியா.
ஏலவே ரஷ்யா மிக நெருக்கடி நிலையில் இருக்கும் சந்தர்ப்பத்தில் வடகொரியாவும் உலகின் பொறிக்குள் மாட்டப் போகிறது என்பது மட்டும் உண்மை.
அமெரிக்காவின் குணம் வடகொரியாவுக்கு தெரியவில்லை போல.




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**மகாலட்சுமி — கொக்குவில்**

**கற்றது கை மண் அளவு கல்லாதது உலகளவு என்பது எதுவோ வியாசரே?**

மிகப் பாரிய பயணிகள் சொகுசுக் கப்பல் ஒன்று பழுதடைந்து விட்டது. உலகின் தலைசிறந்த எந்திரிகள் பலர் அந்தக் கப்பலை திருத்த முற்பட்டனர். ஆனால் அவர்களுக்கு தோல்வியே மிஞ்சியது.
அந்த ஊரில் மீன்பிடிக்கும் கப்பல்களைத் திருத்தும் ஒரு முதியவர் குறித்த கப்பலைத் திருத்துவேன் என முன் வந்தார்.
அனைவரும் அந்த முதியவரை ஏளனம் செய்தனர். படித்த அறிவுள்ளவர்கள் பலர் வந்து கூட திருத்த முடியாத இந்தக் கப்பலை படிக்காத முதியவர் எவ்வாறு பழுது பார்ப்பார் என வெளிப்படையாகவே பேசினர்.
அந்த முதியவர் கப்பலின் இயந்திரத்தை சுற்றிப் பார்த்துவிட்டு இயந்திரத்தின் குறிப்பிட்ட சில இடங்களில் தான் வைத்திருந்த சுத்தியலினால் அடித்து விட்டு இயந்திரத்தை இயக்கச் சொன்னார்.
இயந்திரம் இயங்கியது. கப்பல் செல்லத் தொடங்கியது.
கற்றவர்கள் தாம் உலகளவு கற்றுவிட்டதாக கருதுவர். அவர்கள் கற்றது கை மண் அளவு மட்டுமே. இதுவே நியதி.



ரஷ்யா விரையும் கிம் ஜாங் உன் கை கொடுக்கிறார். ரஷ்யா அதிபர் கை நீட்டுகிறார் இதுபற்றி?

**மதுவன் — மீசாலை**

**ஈ, எறும்பைக் கூட கொல்லக்கூடாது எனப் போதித்த புத்தபெருமானைப் பின்பற்றும் பிக்குகள் இரத்தம் குடிக்க நிற்கிறார்களே?**

இந்த நாட்டில் இனங்களுக்கிடையில் முரண்பாடு ஏற்படக் காரணமானவர்கள் யார்?
இந்த நாட்டில் மதங்களுக்கிடையில் விரிசல் ஏற்படக் காரணமானவர்கள் யார்?
இந்த நாட்டில் ஆயுதப்போர் வெடிக்க காரணமானவர்கள் யார்?
இந்த நாடு பொருளாதார ரீதியில் கெட்டுக் குட்டிச்சுவராகப் போவதற்கு துணை நின்றவர்கள் யார்?
அன்பை மட்டும் போதிக்க வேண்டியவர்கள் ஒரு இனத்துக்கு ஆதரவளித்து அவர்களுக்கு வன்மத்தை தூண்டிவிட்டவர்கள் யார்?
இவை அத்தனைக்கும் பதில் பிக்குகள் என்றே வரும். அந்தளவிற்கு பிக்குகள் தமது போதனைகளை மறந்து நாட்டில் குழப்பங்கள் ஏற்பட காரணமாய் இருக்கிறார்கள்.
இவர்களை கட்டுப்படுத்த வேண்டும். இல்லையேல் நாடு மீண்டும் அழிவை நோக்கிப் பயணிக்கும்.

**சுதன் — குப்பிழான்**

**எல்லோரும் சேர்ந்து நாட்டை நாசமாக்கிவிட்டு இப்போது நாட்டைக் காட்டிக் கொடுக்க மாட்டார்களாமே?**

அரசியல்வாதிகள் தமது அரசியல் ஆதாயத்திற்காக எந்த எல்லை வரைக்கும் செல்வார்கள் என்பதற்கு வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த அட்டூழியம் சாட்சியமாகி நிற்கிறது.
அந்தளவிற்கு அரசியல்வாதிகளின் உசுப்பேற்றல் பேச்சுக்கள் வன்மத்தை விதைக்கும் செயல்கள் அமைந்தன என்பது தான் உண்மை.
வன்னியில் இலட்சம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டபோது கேட்காத சர்வதேச விசாரணை உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குக் கேட்கப்படுகிறது எனின் அவர்களின் சிந்தனை என்ன.
இரண்டு கொடும் செயல்களைச் செய்ததும் ராஜபக்ஷர்கள் என்பது தெரிந்தும் இவர்கள் வாய் மூடி இருப்பது ஏன்?

**ரிதுஷ் — வதிரி**

**ஜோக் ஒன்று சொல்லுங்கள் வியாசரே கேட்டுச் சிரிப்போம்?**

நபர் 1 :-நம்ம மாரிமுத்துவின் மகன் சின்னராசு திருமணம் செய்யப்போகும் பெண்ணின் பெயர் அதிஷ்டமாம்.
நபர் 2:- அப்படியென்றால் சின்னராசாவை அதிஷ்டம் அடிக்கப்போகிறது என்று சொல்லு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: சந்திரோதயம்
பாடகர் : T.M.சௌந்தரராஜன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
இயற்றியவர்: வாலி



புத்தன் ஏசு காந்தி பிறந்தது
பூமியில் எதற்காக
தோழா ஏழை நமக்காக
கங்கை யமுனை காவிரி
வைகை ஓடுவதெற்காக
நாளும் உழைத்து தாகம்
எடுத்த தோழர்கள் நமக்காக
கேள்விகுறி போல் முதுகு
வளைந்து உழைப்பது எதற்காக
மானம் ஒன்றே பெரிதென்று
எண்ணி பிழைக்கும் நமக்கர்க

புத்தன் ஏசு காந்தி பிறந்தது
பூமியில் எதற்காக
தோழா ஏழை நமக்காக

நிழல் வேண்டும் போது மரம் ஒன்று உண்டு
பகை வந்த போது துணை ஒன்று உண்டு
நிழல் வேண்டும் போது மரம் ஒன்று உண்டு
பகை வந்த போது துணை ஒன்று உண்டு
இருள் வந்த போது விளக்கொன்று உண்டு
எதிர்காலம் ஒன்று எல்லோர்க்கும் உண்டு
உண்மை என்பது எங்கும் உள்ளது
தெய்வத்தின் மொழியாகும்
நன்மை என்பது நாளை வருவது
நம்பிக்கை ஒளியாகும்

புத்தன் ஏசு காந்தி பிறந்தது
பூமியில் எதற்காக
தோழா ஏழை நமக்காக

பொருள் கொண்ட பேர்கள் மனம் கொண்டதில்லை
தரும் கைகள் தேடி பொருள் வந்ததில்லை
பொருள் கொண்ட பேர்கள் மனம் கொண்டதில்லை
தரும் கைகள் தேடி பொருள் வந்ததில்லை
மனம் என்ற கோவில் திறக்கின்ற நேரம்
அழைக்காமல் அங்கே தெய்வம் வந்து சேரும்
அழுதவர் சிரிப்பதும் சிரித்தவர்
அழுவதும் விதி வழி வந்ததில்லை
ஒருவருக்கென்றே உள்ளதெல்லாம்
இறைவனும் தந்ததில்லை

புத்தன் ஏசு காந்தி பிறந்தது பூமியில் எதற்காக
தோழா ஏழை நமக்காக
கங்கை யமுனை காவிரி வைகை ஓடுவதெற்காக
நாளும் உழைத்து தாகம் எடுத்த தோழர்கள் நமக்காக

புத்தன் ஏசு காந்தி பிறந்தது பூமியில் எதற்காக
தோழா ஏழை நமக்காக

# சிவபூமி ஒருபோதும் பௌத்த பூமியாகாது

சிங்கள பௌத்த பேரினவாத அரசு வடக்கு - கிழக்கு தமிழர் தாயக பிரதேசமெங்கும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பௌத்த விகாரை களை கட்டுவதற்கு தீர்மானித்து அதையும் கொஞ்சம் கொஞ்சமாக செயலில் செயற்படுத்தி வருகின்றது. இது ஈழத் தமிழர்களின் சமய ரீதியான ஜனநாயக பண்பாட்டு வாழ் வியலை அடியோடு சிதைக்கும் ஒரு சதிச் செயலாகும்.

இலங்கை முழுவதும் சிவபூமி என பெயர் பெற்றிருந்தாலும் அந்த சிவபூமிக்குரிய மதம் வேறு. ஆயுதம் வேறு. ஆனால் பௌத்த மதம் ஆயுதத்தை கீழே போட வைக்கும் அதிசக்தி பெற்றது. ஆனால் அதே மதத்தை ஆயுதமாக பயன்படுத்தி வேற்று இனத்தை ஒடுக்க நினைப்பது. அழிக்க நினைப்பது ஒருநாளும் ஏற்பதற்குரியதல்ல.

மதங்களால் இனங்களுக்கு இடை யில் வேற்றுமைகளை வளர்ப்பதை விட, மனித மனங்களால் இனங்களுக்கு இடையிலும் மதங்களுக்கு இடையிலும்

**மனித நேயத்தையும் சகிப்புத் தன்மை யையும் மனித உள்ளங்களில் வளர்த்துக் கொண்டி ருக்கும் ஒரு மதமானது அதன் புனித அடை யாளங்களைக் ஒரு தேசத் தின் தனிப்பட்ட சிறுபான்மை இனத்துக்கு எதிராக பயன்ப டுத்துவது. மாபெரும் பாவமாகும் என்பதை பௌத்த மத துறவிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.**

அனைத்து அடிப்படை ஆன்மிக ரீதியான் மற்றும் சமயரீதியான பண்பாட்டு விழு மியங்களையும் அதன் தன்மைகளையும் கடைப்பிடிக்கும் ஒரு பூமியாக ஈழத் தமிழர்கள் பரந்து வாழும் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகமே அதில் எப்போதும் மேலோங்கி நிற்கின்றது.

சிங்கள பௌத்தம் எத்தனை விகாரை களை எழுப்பினாலும் சிவபூமி ஒருபோதும் பௌத்த பூமியாக மாறுவதற்கான சந்தர்ப்பத்தை நிரந்தரமாய் இழந்தே நிற்கும் என்பதே தமிழர் மண் ணின் பெரும் உண்மையாகும்.

மனித நேயத்தையும் சகிப்புத் தன்மை யையும் மனித உள்ளங்களில் வளர்த்துக் கொண்டிருக்கும் ஒரு மதமானது அதன் புனித அடையாளங்களை ஒரு தேசத்தின் தனிப்பட்ட சிறுபான்மை இனத்துக்கு எதிராக பயன்படுத்துவது மாபெரும் பாவமாகும் என்பதை பௌத்த மத துறவிகள் உணர்ந்து கொள்ள வேண் டும்.

ஒற்றுமையை வளர்த்து நாட்டை காப் பாற்ற வேண்டியது ஒரு ஜனநாயக அர சின் தார்மீகப் பொறுப்பாகும். அதை இலங் கையரசு செய்யுமா? என்பது எப்போதும் நிச்சயமற்ற ஒன் றாகவே இருந்து வந்துள்ளது.

நாட்டின் அரசியலையும் அந்த அரசி யலை நம்பியிருக்கும் மூவின மக்க ளையும் நல்வழிப்படுத்த வேண்டிய பௌத்த துறவிகள் தங்கள் காவிக்கு இரத்த சாயம் பூசுவதற்கு திமிறி எழு வது துர்ச் செயலாகும்.

அவர்கள் தங்கள் காவியின் எல்லை க்கு உட்பட்டு நிச்சயம் தர்மமாய் செயற் படுவார்களாயின் இலங்கையில் உள்ள மூவின ம்க்களும் எல்லையில்லா சுதந் திரத்தை நிரந்தரமாய் அனுபவித்து தங்கள் ஜனநாயக உரிமைகளையும் சமமாக பங்கிட்டுக் கொள்ள முடியும்.

**சாம் - ரமேஸ்குமார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறும் புதுயுகம்



அண்மையில் ஒரு திருமண நிகழ்வொன்றிற்கு சென்றிருந்தேன்.

குறித்த நிகழ்வு நடைபெறும் வீட்டு வாசலில் விருவிரு என ஒரு பெரியவர் கோபமாக வருவதைக் கண்டேன்.

என்னவாக இருக்கும் என்று எனக்குள் எண்ணியபடி நிற்க அந்த முதியவர் "நாகமில்லாத ஊரில நாக்கிளிப் புழு படமெடுத்து ஆடிச்சாம்..." என்று கூறியதுடன் நாலு இங்கிலீஸ் வார்த்தைகளையும் சேர்த்துப் பேசிக்கொண்டு சென்றார்.

நான் விழா நடைபெறும் வீட்டிற்கு வந்தேன்.

வாசலில் வரவேற்க ஆளிருக்கவில்லை. தமிழர் கலாசார முறைப்படி சந்தனம் தர ஆள் இல்லை.

கும்பத்தின் ஓரத்தில் இருந்த சந்தனத்தை தொட்டேன். தண்ணீர் இன்றி காய்ந்து கிடந்தது. பன்னீரை எடுத்து சந்தனத்தில் ஊற்றி குழைத்து நானே எனக்குப் பொட்டு வைத்துவிட்டு உள்ளே சென்றேன்.

முத்துக்கள் பதித்த மணவறையில் தம்பதி சமேதரராய் மணமக்கள் இருப்பார்கள் என்று எண்ணிச் சென்ற எனக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

சிறிய மேடை வட்டக் கம்பியில் சில கலர் பலூன்கள் கட்டப்பட்டிருந்தன .மேலைத்தேய சாயல் கொண்ட சோபா.

கெமராக்காரர் மணமக்களை இப்படி நில்லுங்கோ, அப்படி நில்லுங்கோ என வழிப்படுத்திக் கொண்டிருந்தார்.

இடையிடையே சிரிப்புச் சத்தம். ஏதோ, இரகசியம் பேசிவிட்டு சிரிப்பதை சிலர் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

சர்பத், பலகாரம் வந்தது எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டே பக்கத்தில் இருப்பவரிடம் பேச்சுக் கொடுத்தேன்.

நான் வரும் போது ஒரு பெரியவர் கோபித்துக்கொண்டு சென்றார் ஏன் என்று.

ஓ.... அதுவா. அவர் பெட்டையின்ர பேரன். திருமணம் எண்டால் எங்கட கலாசார முறைப்படிதான் செய்ய வேணும் எண்டு ஒற்றைக் காலில நிண்டவர்.

ஆனால் இங்க எல்லாம் தலைகீழா நடந்தது. அதுதான் கோபிச்சுக் கொண்டு போட்டார்.

அடக்கடவுளே அதுவோ விசயம் எண்டபடி திரும்பினால் நகைச்சுவை நடிகர் யோகிபாபுவின்ர தலைமுடி. அதை கிழறி கிழறி விட்டபடி குதிக்காலுக்கிள்ளால போக ஏலாத ரவுசர். அதையும் இழுத்து இழுத்து மேலே விட்டபடி சேட் பட்டினைக் கழற்றி உள்ளுக்குள்ள போட்ட ரீசேட் தெரியுற மாதிரி விட்டிருக்கு.

வெள்ளைச் சப்பாத்து. சொக்ஸ் போடவில்லை. சிவப்புக் கலர் வட்டக் கண்ணாடி பார்க்கவே விசித்திரமா இருந்தது.

அநேகமானோர் அங்கு அப்படித்தான் நின்றனர்.

போனை வச்சு ஏதோ செய்தினம். கேட்டா ரிக்ரொக் ஆம். பெரியவர்கள் இருக்கும் இடம் என்ற இங்கிதம் ஏதும் இல்லை. அவை அவையின்ர பாட்டில ஒரு புது உலகத்தில இருக்கினம்.

பெரியவர்களை மதிக்கிற பண்பு இல்லாத ஒரு புதுவித சந்ததி உருவாகப் போகுது என்பது மட்டும் தெளிவாகத் தெரிந்தது. எழுந்து மேடைக்குச் சென்று மணமக்களை வாழ்த்தி விட்டு வீடு நோக்கி விரைந்தேன்.

மனம் ஏதோ படபடப்பாய் இருந்தது. அந்தப் பெரியவரின் கோபம் கண்ணுக்குள் நிழல் ஆடியது.

நாகமில்லாத ஊரில நாக்கிளிப் புழு படமெடுத்து ஆடிச்சாம்! அவர் கூறிய அந்த வார்த்தை காதில் இடியாய் இறங்கியது. இறைவா எமது சந்ததியைக் காப்பாற்று என மன்றாடுவதை விட வேறு எதை எம்மால் செய்துவிட முடியும்?

மாவை.நா.கஜேந்திரன்

# காடுகளை உருவாக்க ஓடிக்கொண்டிருக்கும் இளைஞன்

**காடுகளை அழிப்பது; கொங்கிரீட் காடுகளை (கட்டடங்கள்) உருவாக்குவது; பிளாஸ்டிக் கழிவுகளைப் பெருக்கிக் கொண்டே போவது, புகைக் கழிவுகளை அதிகரித்து பூமியை வாழத் தகுதியற்ற இடமாக மாற்றுவது என தான் செய்யும் கொடுஞ்செயல்களை மனிதன் நிறுத்தினால் மட்டுமே உலகம் ஓரளவுக்காவது பழைய நிலையை அடையும்.**

கனடா நாட்டைச் சேர்ந்த மாரத்தான் ஓட்ட வீரரான ஆன்டோயின் மோசஸ், அந்நாட்டில் 13 லட்சம் மரக்கன்றுகளை நட்டுள்ளார். ஒரே நாளில் 23,060 மரக்கன்றுகள் நட்டு உலக சாதனையும் படைத்திருப்பது பலரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளது.

காலநிலை மாற்றத்தால் உலக நாடுகள் அனைத்தும் பெரும் பாதிப்பைச் சந்தித்து வருகின்றன. வெள்ளம், புயல், வறட்சி, காட்டுத்தீ எனப் பெரும் இயற்கைப் பேரிடர்களால் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான உயிரிழப்புகளும் பொருளாதார இழப்புகளும் ஏற்படுகின்றன. அதேபோல் ஆர்ட்டிக், அண்டார்ட்டிக் கண்டங்களில் உள்ள பனிப்பாறைகள் உருகி வருவதால் கடல்நீர் மட்டம் அதிகரித்து அதன் மூலம் உலக நாடுகள் பெரும் அபாயத்தை எதிர்கொள்ளும் சூழலும் நெருங்கி வருகிறது.

அனைத்துக்கும் முக்கிய காரணம், காலநிலை மாற்றமே. காலநிலை மாற்றத்துக்கு முக்கிய காரணம் மனிதர்களின் செயற்பாடுகள்தான்.

ஆனால், இவற்றையெல்லாம் "உலக நாடுகளின் தலைவர்கள்" என்று சொல்லிக் கொள்ளும் அரசியல்வாதிகள் துளிகூட பொருட்படுத்தவில்லை.

இதற்கு நடுவேதான் துளிர்த்தெழுந்திருக்கிறார் ஆன்டோயின் மோசஸ். உலகச் சுற்றுச்சூழலில் தன்னுடைய பங்கை உணர்ந்தவராக மரம் வளர்ப்பைப் பெரும்பணியாக எடுத்துச் செயற்பட்டு வருகிறார். இதுவரையில் 13 லட்சத்துக்கும் அதிகமான மரங்களை நட்டிருக்கும் இவர், 2021 ஆம் ஆண்டு, கின்னஸ் சாதனையாளராகப் பதிவாகியுள்ளார். 2001 ஆம் ஆண்டு கனடாவைச் சேர்ந்த கென்னி சாப்ளின் என்பவர் 24 மணி நேரத்தில் 15,170 மரங்களை நட்டதே முந்தைய சாதனையாக இருந்தது.

மோசஸ் தொடர்பான வீடியோக்கள், இணையத்தில் வைரல். 15 நொடிகள் கொண்ட ஒரு வீடியோவைப் பகிர்ந்திருக்கும் நோர்வே நாட்டைச் சேர்ந்த சுற்றுச்சூழல் நிபுணர் எரிக் சோல்ஹைம், '23 வயதான இளைஞர் அன்டோயின் மோசஸ் புதிய சாதனையைப் படைத்திருக்கிறார். 24 மணி நேரத்தில் 23,060 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. ஒரு நிமிடத்தில் சுமார் 16 கன்றுகளை இந்த இளைஞர் நட்டிருக்கிறார். அதாவது 3.75 நொடியில் ஒரு மரக்கன்றை அவர் நட்டிருக்கிறார்' எனப் பாராட்டியுள்ளார்.

ஆறு ஆண்டுகளாக பல்வேறு இடங்களில் மரங்களை நட்டுவரும் மோசஸ், "காடுகளை மீண்டும் நாம் அமைப்பதன் மூலம் புவி வெப்பமயமாதலை மாற்றலாம். என்னுடைய முயற்சி, கின்னஸ் அமைப்பால் இந்த ஆண்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. என்னைப் பற்றிய கட்டுரையும் வெளியிடப்பட்டுள்ளது. இந்தச் சாதனையைப் படைக்க உதவிய என்னுடைய குழுவினருக்கு நன்றி" எனத் தெரிவித்துள்ளார்.

ஒரு கையில் மண்ணைத் துளையிடும் கருவியையும் இடுப்பைச் சுற்றி மரக்கன்றுகள் வைக்கப்பட்ட பைகளையும் வைத்துள்ளார். ஒரு கையால் மண்ணைத் துளையிடுவதும் மற்றொரு கையால் துளையிட்ட இடத்தில் மரக்கன்றை நடுவதும் மோசஸின் பாணி. ஓட்டப்பந்தய வீரர் என்பதால், மரக்கன்று நடும் வேலையை வேகவேகமாகத் தன் பாணியில் அவர் செய்வது, வேற லெவல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித மாண்பை மதிப்போம்



மனிதப் பிறப்பானது கடவுளின் அரிய கொடையாகுமே
அரிய கொடையை உணராத மனிதர் உண்டல்லவா
மனிதத்தை மனிதன் மதிக்கும் பண்பு வேண்டுமே
வீதியிலே வீழ்ந்து கிடக்கும் மனிதனை. பாரா முகமேனடா

குருதி கொடுப்பதற்கும் மனித நேயம் வேண்டுமல்லவா
சிறையில் வாடுவரை சென்று பார்ப்பது
மனிதத்தை மதிக்கும் செயல் அல்லவா
மனிதப்படு கொலைகள் மனதை உருக்குகின்றதே
உயிரை மாய்க்கும் செயல் உலகத்தில் நடக்கின்றதே

மானமிழந்து மதிகெட்டுப் போனாலும்
சமூகம் பார்க்க மனிதன் வாழ்ந்து காட்டனுமே
கல்வி அறிவு படைத்தவர்களும் தவறான முடிவு எடுக்கிறார்கள் அல்லவா
சிந்தித்து செயற்பட உறுதி எடுத்திடுவாய்

எஸ் .பி. தனா,தெல்லிப்பழை.

## பகட்டுவாதம்...

சுவரில் ஆணி அடித்த
ஒருபொழுதில்
சொற்களால் அறைந்து
சிலுவையில் தொங்கவிட்டாய்..

அதிகாலையில் எழுந்து
பரபரப்பாக இயங்கிக்
கொண்டிருக்கையில்
இப்போதுதான் இரவுப்பணி முடித்து
உறங்கப்போவதாக
எனது பகல்களை உனது இரவுக்காய்
காவல் வைக்கிறாய்..

படிக்கட்டுகளில் கொஞ்சம்
வேகமாக நடந்தால்
வாதம் செய்யவென
ஓடிவருகிறாய்..

இரவு நேர உணவிற்காய்
மாவு அரைக்கையில்
திடீரென வந்துஎன்னை அரைத்து
தோசையெனச் சுடுகிறாய்..

பிள்ளைகளின் ஆரவாரத்தில்
அமைதி குலைகிறது
என்கிறாய்..

மொட்டைமாடித் தொட்டிச்செடிகள்
கொஞ்சம்உன் வீட்டை
எட்டிப்பார்த்தால்
கிள்ளிவிடுகிறாய்..

எனது சுதந்திரத்திற்கான
வழியைக் கூட
உன் சுதந்திரத்துக்குள்தான்
பூட்டி வைக்கிறாய்..


சொல்லப்போனால்
எனது சுதந்திரத்தை
அடகு வைத்துத்தான்
வாடகை கட்ட வேண்டியுள்ளது
வாடகை தேசத்து வாடகை வீடுகளில்.

சங்கரி,சிவகணேசன்

## திருமணத்தில் ஒரு மனதாகி

இளமைக் கனவுகளோடும்
இளமை துள்ளல்களோடும்
திருமண பந்தத்தில் இணைய
எதிர்பார்க்கும் இளவல்களும்
சோடிப்பொருத்தம் தேடி
சோதிடர்களிடம் சாதக இணைவு
கேட்கும் பெற்றோர்களும்
முக்கியமான ஒன்றை பார்க்காது
விடுகின்றார்களே?
அது தான் மனப் பொருத்தம்
சேராத மனங்களோடு
திருமணத்தில் சேர்பவர்கள்

குடும்ப வாழ்க்கையில்
முரண்பட்டு நிம்மதியிழந்து
பிழையான பாதையில்சென்று
சீரழிவதும்
நீதிமன்றப் படியேறிப்
பிரிந்துபோவதுமென
இளம்குடும்பங்களின்
அவலங்கள் ஆயிரமாயிரம்
அத்துடன் உருவாகும்
சந்ததிகளின் எதிகாலமும் சீரழிவுதான்
ஆதலால் மனப்பொருத்தத்தை
முதலில் தேடுவோம்



அன்புதுரை, மானிப்பாய்

## மௌனத்தின் தேடல்- 685




## விலங்கின மனிதா?

கழுத்தணி அறுத்தனை
கை விலங்கினை அணிந்திடவோ
விலங்கின மனிதா?
வலி மிகுந்த வழிப்பறி கொள்கையால்
பழி சுமக்கும் உன் உறவுகளுமே
உழைத்து வாழ்ந்திடு உயர்வாய்

தமிழினியன் பரந்தாமன்,
வவுனியா.

## மௌனத்தின் தேடல்-687



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சாங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## வழிப்பறி

தன்னந் தனியே தளர் நடையுடன்
தள்ளாடி வழி நடந்து செல்லும்
தாயின் தாலியை
வழிப்பறி செய்யும்
இளைய சமூகமே!
உன் துஷ்ட செயலுக்கு
முடிவு தான் இல்லையோ!

க. திருமகள்,
பண்டத்தரிப்பு.

## திருடர் பயம்

வலி தெரியாது
பாடுபட்டுளைத்து
ஒறுத்தல்கள் செய்து
தேடியதை
அச்சமின்றி அனுபவிக்க
முடியவில்லையின்று
வழிப்பறியம் வீடுடைப்புமென
கொள்ளையடிக்கும்
திருட்டு ராஜாக்களின்
இரஜாங்கத்தில் பீதியற்று
வாழ்வதெப்படி?

சி.இ. அன்பத்துறை
மானிப்பாய்

## நவீன நாயகர்

இறைவன் அன்று போட்டு
வைத்த இவ் உலகியலின்
ஒவ்வொரு உயிர்
வாழ்வியலினதும்
இறுதிக்கணக்கை -இன்று
தப்பாமல் நிறைவேற்றித்
தீர்த்துவைக்க
வந்த நவீன யுக
இப்கரர்கள்
இப்படி தானோ?

சி.மகாலட்சுமி,கொக்குவில்

## போதையின் போக்கு

பொழுதை பழுதாக்கும்
போதைப் பாவனைகள்
தொடர்கதை போன்று
தொகை வகையாகின்றது
பொன் பொருள் பறிப்பும்
பெண்களைப் பாதிக்கின்றது
பொன் போன்ற பொழுதுடன்
பொருளாதாரமும் பாதாளத்தில்
போக்குவரத்தும் பெரும்
போர்க்களம் போலாகின்றது

க. நாகராசா ,நுணாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்புறா

## மதி சொன்ன கதை

"இன்னும் என்ன விளக்கிச் சொல்ல வேண்டும். பெண்ணொருத்தி நீராடுவதைப் பார்த்தபின் அந்தப் பகுதியை விட்டு அகல வேண்டியதுதானே பண்புள்ள ஆண்மகன் கடமை?"

வேகத்துடனும் ஆணித்தரமாகவும் எழுந்த அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாத இளையபல்லவன் அவளது இன்னொரு தோளையும் பற்றி, "மஞ்சளழகி! இன்று காலையில் சூரிய உஷ்ணந்தான் அதிகமாயிருக்கிறது என்று எண்ணினேன்" என்று பேச்சை மாற்றினான்.

"வேறு எந்த உஷ்ணம் அதை மீயிருக்கிறது?" என்று கேட்டாள் அவள்.

"உன் சொற்களின் சூடு" என்று சொல்லிக் கொண்டே அவளைப் பின்னுக்கு இழுத்த அவன் அளையும் மணலில் உட்கார வைத்துத் தானும் அவள் பக்கத்தில் அமர்ந்து கொண்டான். நீட்டிய கால்கள் நான்கையும் அலைகள் வந்து வந்து தடவிச் செல்ல, உட்கார்ந்த அவ்விருவரும் ஒரு வரையொருவர் பாராமல் கடலையே பார்த்துக் கொண்டு பேசினார்கள்.

"இப்பொழுது கொஞ்சம் உஷ்ணம் குறையும்" என்றான் இளையபல்லவன்.

"எப்படிக் குறையும்?" என்று மஞ்சளழகி கேட்டாள்.

"அலைகள் கால்களில் பாய்கின்றன."

"ஆம்! அலைகள் பாய்கின்றன. மெய் குளிரும் உள்ளம் குளிருமா?"

"குளிரப் பண்ணிக்கொள்."

"என்னால் முடியாது."

"வேறு யாரால் முடியும்?"

"விதியால் முடியும்."

"விதியா!"

"ஆம். இதோ பாருங்கள் இந்த அலை வந்து காலைத் தடவுகிறது. மீண்டும் போய் விடுகிறது. மறுபடியும் வருகிறது? போகிறது. அற்ப கால ஸ்பரிசம் இது. விட்டு விட்டு விலகும் நிலை. என் வாழ்க்கையில் நீங்களும் இப்படித்தான் மோதியிருக்கிறீர்கள்.

அலை போலப் போய்விடுவீர்களா, போய்ப் போய் வருவீர்களா? போகாமல் பகிட் பாரிஸான் மலைபோல் நிலைத்து நிற்பீர்களா? எனக்குத் தெரியவில்லை. அது உங்களுக்கும் தெரியாது. விதிதான் அதை நிர்ணயிக்கும். காலம்தான் முடிவு சொல்லும். ஆனால் என் மதி மட்டும் ஒரு கதை சொல்கிறது," என்றாள் மஞ்சளழகி.

"என்ன சொல்கிறது உன் மதி?" என்று கேட்டான் இளையபல்லவன்.

ஆழ்கடலிலிருந்து பார்வையை அவன் மீது திருப்பினாள் மஞ்சளழகி. நீண்டநேரம் அவள் கண்கள் அவனை உற்று நோக்கின. அந்தக் கண்களில் பெரும் மயக்கம் இருந்தது.

கனவும் பரந்து கிடந்தது. "மதி




காலத்தின் பதிவு 77

சொல்லும் கதையைச் சொல்லட்டுமா?" என்று கனவிலிருந்து கேட்பவள் போல் கேட்டாள் அவள்.

"சொல் மஞ்சளழகி!" என்றான் அவன் சஞ்சலத்துடன்.

கதையை அவள் சொன்னாள். மதி சொன்னாள். மதி சொன்ன கதையானதால் உண்மை புதைந்து கிடந்தது. அந்த இருவரைப் பற்றிய உண்மை மட்டுமல்ல அது. இரு நாடுகளைப் பற்றிய உண்மை.

இரு நாடுகளின் வரலாறுகளைப் பற்றிய பேருண்மை அக்கதையில் விரிந்தது.

(தொடரும்...)

---

# நான் வைரமுத்து பேசுகிறேன்... 23

## அந்தி மந்தாரைகள்

ஒவ்வொருவர் கையிலும் மூன்றாவது காலாய் முளைத்திருக்கும் கைத்தடி.

அவர்களின் வார்த்தைகளுக்கும் வயதாகிவிட்டதல்லவா? சொல்லிலும் தள்ளாட்டம்.

சிமெண்ட் பெஞ்சுகளில் அவர்கள் ஒருவரை ஒருவர் உரசிக் கொண்டு உட்கார்ந்திருக்கும் அந்தக் காட்சி நெருக்கமாய்த் தொடுக்கப்பட்ட மதுரைமல்லிகைளைப் பார்ப்பது போல இருக்கிறது.



அவர்களின் முகங்களில் எத்தனை அனுபவ முத்திரைகள். அவர்களை நான் தூரத்திலிருந்தே நேசிக்கிறேன்.

ஓ! உயிரோடு இருக்கும் இறந்த காலங்கள் அல்லவா அவர்கள்?

ஒவ்வோர் அந்தியிலும் அந்த அஸ்மனச் சூரியன்கள் இந்த வானத்தின் கீழே வந்து கூடுகின்றன.

அரிதாய்ச் சிரிக்கிறார்கள் அவர்கள்.

அதிகம் பேசுகிறார்கள்.

வானத்தைப் பார்த்துக்கொண்டே முணுமுணுக்கிறார்கள். அவர்கள் கூடுவது எதன் பொருட்டு? அவர்களின் பேசுபொருள் யாது?

அவர்கள் மாலை வேளையில் பேசுவது வாழ்க்கையைப் பற்றியோ?

இல்லை - வாழ்க்கைதானே அவர்களைப் பேசிக் கொண்டிருக்கிறது.

பிறகென்ன? மரணம் பற்றியோ? இல்லை வாலிபனே! இல்லவே இல்லை.

ஓர் இளைஞன் மரணத்தைப் பேசும் அளவுக்கு ஒரு முதியவன் மரணத்தைப் பேசுவதில்லை.

மரணத்தை அவர்கள் வீட்டுக்கு வந்து கொண்டிருக்கும் விருந்தாளியாக விரும்புகிறார்கள்.

முதுமை-மரணத்தை உபசரிப்பதற்கு ஒத்திகை பார்த்து கொண்டிருக்கிறது.

இப்போது அவர்கள் சுமையாக நினைப்பது உடம்பைத் தானே தவிர மரணத்தை அல்ல.

தங்களுக்கு அந்நியமில்லாத ஒன்றைப் பேசுவதில் அவர்களுக்கு ஆசையில்லை.

வேறென்ன பேசுவார்கள்?

"தங்களின் பழைய பள்ளிக்கூடத்து வாத்தியார்களின் கண்டிப்பு."

"முதன் முதலில் வாங்கிய பேனாவின் விலை."

"கர்நாடக சங்கீதத்தின் மேன்மை."

"தியாகராஜ பாகவதரின் ஜவ்வாதுப் பொட்டு."

"பழைய சீரகச் சம்பாவின் ருசி"

"டி.ஆர்.ராஜகுமாரியின் உதடு."

"சுக்குக் கசாயத்தின் சுறுசுறுப்பு."

இவைகளெல்லாம் அவர்களின் பேசுபொருளாக இருக்கக் கூடும்.

அவர்கள் சுகவாசிகள். இந்த முதுமையை வாழ்க்கையின் உபரி நாட்கள் என்றே உணர்ந்து வைத்திருக்கிறார்கள்.

அவர்களின் சுதந்திரமான ஏகாந்தத்தில் சுவை இருக்கிறது.

அந்த அந்தியில் அவர்களின் சந்தோஷ சபை கூடிய பிறகு வராத ஒருவருக்காகச் சந்தேகத்தோடு வருத்தப்படுகிறார்களே - அப்போது அவர்களின் மனிதாபிமானத்தை தரிசிக்க முடிகிறது.

சபை கலையும் போது "நாளை பார்க்கலாம்!" என்று விடை பெறுகிறார்கள் -

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

365

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# உணவில் உப்பு சேர்த்துக் கொள்வது ஏன் அவசியம்?

கறியுப்பு சம்பந்தமான சில பிழையான புரிதலால், பலர் உப்பு இல்லாமல் உணவை சாப்பிட்டு அவர்களது வாழ்க்கையும் உப்புசப்பில்லாமல் போவது மனவருத்தமான ஒரு விடயம் ஆகும். சோடியம் குளோரைட்டு எனப்படும் கறியுப்பு, மனிதன் உயிர் வாழ முக்கியமான பதார்த்தம் ஆகும்.

உடம்பில் உப்பு குறைவது பல தீய விளைவுகளை ஏற்படுத்தும். அண்மைக் காலமாக, பலர் உடம்பில் உப்பு குறைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைகளை பெற்று வருகின்றனர். உப்பு குறைந்ததால், அதை அவர் களது இரத்த நாளங்களினூடாக ஏற்ற வேண்டிய நிலை உள்ளது. உடம்பில் உப்பு குறைவதால், நல்ல பல மருந்துகளை அவர்களுக்கு கொடுக்க முடியாத நிலை ஏற்படுகிறது.

குறிப்பாக இதயம் மற்றும் சிறுநீரகங்களை பாதுகாக்கும் தன்மையுடைய மருந்துகளை கொடுக்க முடியாது. வாயால் உப்பு சேர்த்த சுவையான உணவை உட்கொள்ளாமல், ஊசி மூலம் நாளங்களினூடாக ஏற்றுவது ஒரு மனவருத்தமான நிலை ஆகும்.

உப்பு சம்பந்தமான பல மருத்துவ ஆய்வுகளின் தொகுப்புகள் என்ன சொல்கின்றன என்று பார்த்தால், சாதாரண மனிதருக்கு உப்பை குறைத்து கொடுப்பதால் குருதி அமுக்கத்தை குறைக்க முடியாது மற்றும் உயர் குருதி அமுக்கம் உள்ளவர்களுக்கு, உணவில் உப்பை குறைப்பதன் மூலம் குருதி அமுக்கத்தை பெரிய அளவில் கட்டுப்படுத்த முடியாது என நிரூபிக்கப்பட்டுள்ளது.

உணவில் உப்பை குறைப்பதன் மூலம் 4 mmHg குருதி அமுக்கத்தை மட்டுமே குறைக்க முடியும். உதாரணமாக, ஒருவரின் குருதி அமுக்கம் 165 mmHg ஆகவும் அவர் அதிக உப்பை பாவிப்பவராக இருந்தால், உப்பை குறைப்பதன் மூலம் அதிக பட்சம் குருதி அமுக்கத்தை 160 mmHg ஆக தான் குறைக்க முடியும். குருதி அமுக்கத்தை குறைக்கும் மருந்துகள் , உடம்பில் உப்பின் அளவை குறைக்கும் தன்மை வாய்ந்தவை.



இதனால் குருதியில் உப்பின் அளவு குறையும். நாம் வாழும் சூழல் வெப்பமானது. ஆகவே , வியர்வை மூலமும் உப்பு உடம்பில் இருந்து இழைக்கப்படும். உயர் குருதி அமுக்கம் உள்ளவர்களை, உப்பை குறைக்க சொல்வதன் மூலம் குருதி அமுக்கத்தில் 4-5 mmHg மட்டுமே குறைக்க முடியும்.


ஆனால், உடற்பயிற்சி செய்வதன் மூலம் 8 mmHg , உடல் நிறையை குறைப்பதன் மூலம் 8 mmHg மற்றும் தியானம் செய்வதன் மூலம் 4 mmHg குருதி அமுக்கத்தை குறைத்துக் கொள்ளலாம். வாழும் காலத்தை நிறைவாகவும் மகிழ்வாகவும் வாழ்வது சுகாதாரத்தில் முக்கிய அங்கம் ஆகும்.

உயர் குருதி அமுக்கம் உள்ளவர்களை, உணவில் உப்பை குறைக்க சொல்வது எவ்வளவு தூரம் பொருத்தமானது என்று நாம் சிந்திக்க வேண்டும். எனவே, அளவாக உப்பு சேர்த்து உணவை சுவையாகவும், ஆரோக்கியமாகவும் உண்டு, உடல் நிறையை குறைத்து , உடற்பயிற்சி செய்து, மதுபான குடி வகைகளை தவிர்த்து, தியானம் போன்ற மன அமைதி தரும் நடவடிக்கைகளை மேற்கொண்டு ஆனந்தமாக வாழ்வது தான் புத்தி சாலித்தனமானது. ஆனால், பதப்படுத்தப்பட்ட, பக்கற்றுகளில் அடைக்கப்பட்ட உணவுகளில் உப்பின் அளவு மிக அதிகமாக உள்ளது. அத்துடன் வேறு பல இரசாயனங்களும் உள்ளன. எனவே, இவற்றை தவிர்ப்பது நல்லது. உப்பை அளவிற்கு மேல் உட்கொள்வது யாருக்கும் ஆபத்தானது தான். நமது முன்னோர்கள் சொன்னது போல், அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.

அத்துடன், வேறு சில உப்பு வகைகளும் ஆபத்தானது. உதாரணமாக, நூடில்ஸ், சூப்களில் சேர்க்கப்பட்ட mono sodium glutamate எனப்படும் உப்பும் உடல் ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல. கறியுப்பை அளவாக உணவில் சேர்த்து ஆரோக்கியமாக உண்டு மகிழ்வாக வாழ்வோம். கறியுப்பு ஆபத்தானது என்ற மனப்பதிவை நீக்கிக் கொள்வோம்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

# இயற்கையான அற்புதபானம் பால்



இயற்கையாகக் கிடைக்கக் கூடிய அதிகூடிய ஊட்டச்சத்து உள்ள உணவு பால் ஆகும். சிறியவர்கள் முதல் வயது முதிர்ந்தவர்கள் வரை அனைவருமே பால் அருந்துவது மிகவும் நல்லது. மேலைத்தேச உணவுவகைகளுடன் ஒப்பிடும்போது எமது உணவில் புரதப்பற்றாக்குறை ஒரு பெரும் பிரச்சினையாக இருந்துவருகிறது. இந்தப் புரதப்பற்றாக் குறையை பால் அருந்துவதன் மூலம் ஓரளவேனும் நிவர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும்.

பெரியவர்கள் பால் அருந்துவது ஆபத்தானது என்ற ஒரு தப்பான அபிப்பிராயம் பலரிடையே காணப்படுகிறது. இந்தத் தவறான மனப்பதிவு காரணமாகப் பால் குடிப்பதை நிறுத்தியவர்கள் பலர். "நான் பயந்து பால் குடிப்பதில்லை" என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்பவர்கள் பலர். வீட்டிலே ஆடு, மாடுகளும் போதிய பாலும் உள்ளவர்கள் கூட அந்தப் பாலை விற்று விட்டு சத்துமா என்றும் ஆடை நீக்கிய பால்மா என்றும் அதிகவிலை கொடுத்து வாங்கி கரைத்துக் குடிக்கும் பரிதாப நிலை இங்கு காணப்படுகிறது.

பால் என்ற இயற்கையான, அற்புதமான, இந்தப் பானத்தில் தரா தரம் கூடிய புரதம், போதியளவு விற்றமின்கள், கனியுப்புக்கள், மாப்பொருள், கொழுப்பு என அனைத்து ஊட்டச்சத்துக்களும் அடங்கி இருக்கின்றன. இதனை ஓர் அதி சிறந்த நிறை உணவு என்று சொல்லுவார்கள்.

மேலைத்தேச நாடுகளில் சொல்லப்படும் உணவுக்கட்டுப்பாட்டு முறைகள் அனைத்தும் எமது மக்களுக்குப் பொருந்தாது. எமது உணவு முறைக்குப் பழக்கப்பட்ட அனைவரும் போதுமான அளவு பால் குடிப்பது பாதுகாப்பானது மாத்திரமல்ல உடல் சுகாதாரத்திற்கு மிகவும் நல்லது. நீரிழிவு, குருதிய முக்கம்.

கொலஸ்ரோல் நோய் உள்ளவர்கள் கூட பால் குடிப்பது நல்லது. ஆடை நீக்கிய பால்மா வகைகளை மட்டும்தான் குடிக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை.

தகரங்களிலே அடைத்து விற்பனையாகும் சத்து மாக்களுடன் ஒப்பிடும்பொழுது இதிலிருக்கும் ஊட்டச்சத்து வீதம் அதிகமாக இருப்பதுடன் எந்த விதமான இரசாயனக் கலப்பு மற்ற மலிவாகக் கிடைக்கக் கூடிய இயற்கையான உணவாக இது விளங்குகிறது.

இருந்தும் தகரங்களிலே அடைத்துவரும் சத்து மாக்களுக்கு நாம் அடிமைப்பட்டுப் போய் இருக்கிறோம். இது ஒரு வேதனையான உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டு வேலைவாய்ப்பு

# மோசடியுடன் தொடர்புடைய 100 பேர் இதுவரை கைது

(கொழும்பு)

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகளுடன் தொடர்புடைய நூறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதிப் பொதுமுகாமையாளரும் ஊடகப் பேச்சாளருமான காமினி செனரத் யாப்பா இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகள் இந்த வருடத்தில் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)


**பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல பாதுகாப்பு நிறுவனத்திற்கு இலங்கை மின்சார சபை சுன்னாகத்தில் வேலை செய்வதற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.

(15 வெற்றிடங்கள்)

Walking Interview 18.09.2023 தொடக்கம் 30.09.2023

**இடம்: 758 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.இல் - 077 054 1323.** (17106)



**Pearson International College**

**Applications are called for IELTS tutors**

- Candidates should have minimum HND in English or any other academic qualification in english medium
- previous IELTS score above or equal to 6.5 is recommonded (not necessary)
- Prior teaching experience would be an added advantage
- Should be able to work during weekends

Email your CV within three days of this advertisement to Pearsoncollege 2020@gmail.com, admin@picsl.lk

**Call +94 74 188 7878 for more info**

(C-7268)

**No.21,3rd Lane, Power house Road, Jaffna.**


# பொலிஸாருக்கு எதிராக அதிகரிக்கும் முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிரடி நடவடிக்கை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் பொலிஸ் நிலையங்களை கண்காணிக்கும் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த மூன்று வருடங்களாக கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை என அதன் ஆணையாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக பொலிஸாருக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் தொடர்பான .முறைப்பாடுகள் அதிகரித்து வருகின்றன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)



# உள்நாட்டு உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி புள்ளிவிபரவியல் திணைக்களம் எச்சரிக்கை

(கொழும்பு)

இந்த ஆண்டின்(2023) இரண்டாவது காலாண்டில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி கடந்த ஆண்டை விட 3.1 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இரண்டாவது காலாண்டிற்கான கணக்கியல் மதிப்பீடுகளை வெளிப்படுத்திய திணைக்களம், விவசாயத் துறையில் வளர்ச்சி காணப்பட்டதாகவும் ஆனால் தொழில்துறை மற்றும் சேவைத் துறைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

2023 ஆம்ஆண்டின் இரண்டாவது காலாண்டிற்கான தேசிய கணக்கு மதிப்பீடுகளை மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் துறை வெளியிட்டுள்ளது. அதன்படி 2023 ஆம் ஆண்டின்படி இரண்டாம் காலாண்டில் மொத்த உள்நாட்டு 2,597,441 மில்லியன் ரூபாவாகப் பதிவாகியுள்ளது.

எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டில் இந்த பெறுமதி 2,680,074 மில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளது. இதன்படி, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 3.1 சதவீதத்தால் சுருங்கியுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், அந்த காலாண்டில் விவசாயத் துறையில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டை விட 3.6 சதவீத வளர்ச்சியாகும்.


தானிய சாகுபடி, செடி வளர்ப்பு, நெல் சாகுபடி, விவசாய ஆதரவு சேவைகள், தேயிலை, மரக்கறி மற்றும் பழ சாகுபடி, கடல் மீன்பிடித்தல் மற்றும் விலங்குப் பொருட்கள் போன்றவற்றில் வளர்ச்சி விகிதங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை தேயிலை கைத்தொழிலின் அறுவடை கடந்த வருடத்தை விட இந்த வருடம் அதிகரித்துள்ளதாக பெருந தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)


**மணிவிழா கண்டு பணி ஓய்வு பெற்ற அதிபர்களை பணிநயந்து வாழ்த்துகிறோம்**



திருமதி.
**இராஜேஸ்வரி விஜயநாதன்**
(கிளி/இயக்கச்சி அ.த.க.பா)
ஆசிரியராக சேவைக்காலம்
06-08.1988-31.01.1992
அதிபராக சேவைக்காலம்
01.02.1992-06.04.2022



திரு.
**சின்னத்தம்பி விசுவாசம்**
(கிளி/மட்டுவில் நாடு அ.த.க.பா)
ஆசிரியராக சேவைக்காலம்
25.03.1998-31.12.2011
அதிபராக சேவைக்காலம்
01.01.2012-30.12.2022



செல்வி.
**சந்திரவதனி சரவணமுத்து**
(கிளி/பரந்தன் அ.த.க.பா)
ஆசிரியராக சேவைக்காலம்
06-08.1988-17.10.2010
அதிபராக சேவைக்காலம்
18.10.2010-31.12.2022



திருமதி.
**ரஞ்சனா ரவீந்திரன்**
(கிளி/ஸ்கந்தபுரம் இல-01 அ.த.க.பா.)
ஆசிரியராக சேவைக்காலம்
28.03.1990-31.10.2010
அதிபராக சேவைக்காலம்
01.01.2010-17.02.2023

பல்வேறு இடர்மிகுந்த சவால்மிகு காலங்களில் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் அதிபர்களாக அரும்பணியாற்றி பணி ஓய்வு பெற்ற அதிபர்களை பணிநயந்து அவர்களின் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகிறோம்.

**கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கம்.** (சி-7267)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன் ஜனாதிபதி மீண்டும் அமெரிக்காவிற்கு



(வோஷிங்டன்)

உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி அடுத்த வாரம் அமெரிக்காவிற்கு வருகை தரவுள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சுலிவன் தெரிவிக்கையில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி செப்டெம்பர் 21 ஆம் திகதி அமெரிக்காவிற்கு வருகை தந்து வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி ஜோ பைடனை சந்திக்கவுள்ளார்.

இதன்போது உக்ரைனுக்கு கூடுதலாக ஆயுதங்கள், இராணுவத் தளபாடங்கள் அளிப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என தெரிவித்துள்ளார்.

உக்ரைன் -ரஷ்யா போர் ஆரம்பித்து ஒன்றரை வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளதுடன் அந்நாட்டுக்கு ஆயுதங்களையும் வழங்கி வருகின்றன.

இதற்கிடையில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி அமெரிக்காவிற்கு விஜயம் செய்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனைச் சந்தித்தார். அதேபோன்று ஜோ பைடன் உக்ரைன் சென்று ஜெலன்ஸ்கியை சந்தித்தார்.

இதேவேளை உக்ரைன் - ரஷ்யா போர் ஆரம்பித்த பிறகு ஜோ பைடன், ஜெலன்ஸ்கி இடையிலான மூன்றாவது சந்திப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# உலகின் மிக உயரமான நாய் உயிரிழப்பு



உலகில் மிக உயரமான நாய் என உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்த சியூஸ் நாய் உயிரிழந்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சியூஸ் உலகில் உயரமான நாய் என்ற வகையில் கடந்த 2022 ஆம் ஆண்டு கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெற்றது.

கிரேட் டேன் ரகத்தை சேர்ந்த இந்த நாய்க்கு எலும்பில் ஏற்பட்ட புற்றுநோய் காரணமாக அண்மையில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

சத்திரசிகிச்சையின் போது சியூஸின் முன்பக்க வலது கால் அகற்றப்பட்டதுடன் சத்திர சிகிச்சைக்கு பின்னர் ஏற்பட்ட நிமோனியா காரணமாக கடந்த 12ஆம் திகதி அதிகாலையில் உயிரிழந்துள்ளது. (நி)

# வேற்றுக்கிரகவாசிகள் குறித்த மர்மத்தை உடைக்கும் முயற்சியில் நாசா

(வோஷிங்டன்)

பறக்கும் தட்டுக்கள் குறித்த நீண்டகால ஆய்வு குறித்த தகவல்களை நாசா பகிர்ந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக வேற்றுகிரகவாசிகள் குறித்த கதைகள், மக்கள் மத்தியில் உலாவி வருகிறது. இதற்கிடையில் கடந்த புதன்கிழமை மெக்சிக்கோ பாராளுமன்றத்திலும் இந்த விவகாரம் எதிரொலித்தது.

நீண்டகாலமாக வேற்றுக்கிரகவாசிகள் பற்றிய ஆய்வை அமெரிக்கா இரகசியமாக மேற்கொண்டு வருவதாகவும் கூறப்படுகிறது. இவ்வாறு பறக்கும் தட்டுக்கள் அல்லது வேற்றுக்கிரகவாசிகள் குறித்து பல்வேறு சர்ச்சைகள் உலாவி வருகின்றன.

இவற்றுக்கு பதிலளிக்கும் வகையில் வேற்றுக்கிரகவாசிகள் குறித்த ஆய்வின் முடிவுகளை நாசா அறிவிக்கவுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஆய்வுகளை மேற்கொள்ள எலான் மஸ்கின் சேடிலைட்ஸ் பயன்படுத்தப்படுமா என்ற கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது. (நி)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை 6 இல் சூரி. செவ<br>கி.பா: 19<br>உயரம்: 5' 3<br>தகைமை/தொழில்: National Diploma in Tourism &Hotel management food& Beverage Excecutive பட்டதாரி (IT, Teacher,Tourism)<br>தொ.இ: B/13932 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 9<br>உயரம்: 152 cm<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: அரச வேலை<br>தொ.இ:G/13914 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>உயரம்: 5' 5<br>தகைமை/தொழில்:மெக்கானிக் சொந்த ஆட்டோ<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/13935 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 16<br>உயரம்: 5' 6<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/13915 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம் : ஆயிலியம்<br>கி.பா: 36<br>உயரம்: 5' 10<br>தகைமை/தொழில்: Bsc (architecture) கட்டடக் கலைஞர்<br>எதிர்பார்ப்பு : வெளிநாடு (Pr உள்ளவர்)<br>தொ.இ: B/13938 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 62 3/4<br>உயரம்: 5' 6<br>தகைமை/தொழில்: AAT,MAAC,ACCA<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி( Singapoor,Austriliya)<br>தொ.இ:G/13916 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 16 1/2<br>உயரம் : 168 cm<br>தகைமை/ தொழில்: A/L ,களஞ்சியப் பொறுப்பாளர்<br>எதிர்பார்ப்பு: ஓரளவு படித்த பெண்.<br>தொ.இ: B/13939 | பிறப்பு: 1994 Non RC<br>நட்சத்திரம்:புனர்பூசம்<br>உயரம் : 5' 2<br>தகைமை/தொழில்: BA(open university final) Teacher<br>எதிர்பார்ப்பு: Rc, Non Rc உடைய. அரச.தனியார் தொழிலுள்ளவர்)<br>தொ.இ:G/13917 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# மொரோக்கோவில் ஏற்பட்ட பூகம்பத்தில் தனது 32 மாணவர்களை இழந்த ஆசிரியை

(மொரோக்கோ)

மொரோக்கோவில் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ள பூகம்பத்தில் ஆசிரியை ஒருவர் தனது மாணவர்கள் 32 பேரை இழந்துள்ளார்.

மொரோக்கோவை தாக்கிய பூகம்பம் குறித்து கேள்வி எழுப்பியவேளை மொரோக்கோ ஆசிரியை உடனடியாக தனது மாணவர்களை பற்றியே பதில் சொல்கின்றார். பூகம்பம் தாக்கியவேளை அவர் மரகேசில் இருந்தார். ஆனால் அவரது மாணவர்கள் பலர் வசித்த அடசீல் கிராமம் பூகம்பம் மையம் கொண்டிருந்த பகுதியில் காணப்பட்டது.

அராபிய பிரெஞ்சு மொழியை கற்பிக்கும் ஆசிரியை தற்போது தனது பாடசாலைக்கு வந்து தனது மாணவர்களை தேடுகின்றார். தனது 32 மாணவர்கள் உயிரிழந்துள்ளமை அவருக்கு தெரியவந்துள்ளது.


நான் அந்த கிராமத்திற்கு சென்று எனது குழந்தைகள் குறித்து கேட்டேன். ஒரு மணித்தியாலத்தின் பின்னர் அவர்கள் அனைவரும் உயிரிழந்துவிட்டனர் என பதில் வந்தது என அவர் தெரிவித்தார்.

செப்டெம்பர் 8 ஆம் திகதி மொரோக்கோவை தாக்கிய பூகம்பத்தினால் கொல்லப்பட்ட 3000 இற்கும் அதிக மாணவர்களில் அந்த மாணவர்களும் உள்ளனர்.

மொரோக்கோவின் தென் பகுதியில் உள்ள மராகேஸ் என்ற நகரமே மோசமாக பாதிக்கப் பட்டுள்ளது. அடசீல் அந்த பகுதியில் உள்ள கிராமம். என்னால் உறங்க முடியவில்லை. நான் இன்னமும் அதிர்ச்சியில் உள்ளேன். மக்கள் நான் அதிஷ்டசாலி என்கின்றனர். ஆனால் நான் எப்படி தொடர்ந்து வாழ்வது என்ற கேள்வியில் சிக்குண்டுள்ளேன் என அவர் தெரிவித்துள்ளார். (நி)

# பிரபலமான தலைவர்கள் பட்டியலில் நரேந்திர மோடிக்கு முதலிடம்

(வோஷிங்டன்)



உலகில் மிகவும் பிரபலமான தலைவர்கள் பட்டியலில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி முதலிடத்தை பிடித்துள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த மார்னிங் கன்சல்ட் வெளியிட்ட குளோபல் லீடர் அப்ரூவல் கணிப்பின்படி பிரதமர் மோடி 76 சதவீத புள்ளிகள் பெற்று முதலிடத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோடிக்கு அடுத்தபடியாக சுவிட்சர்லாந்து ஜனாதிபதி அலைன் பெர்செட் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் [illegible] இடத்திலும் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ 10 ஆவது இடத்திலும் இருப்பதாக அந்த கணிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் புலனாய்வு ஆராய்ச்சி நிறுவனமான மார்னிங் கன்சல்ட் 22 உலகத் தலைவர்களை வைத்து நடத்திய ஆய்வில் மேற்கண்ட தகவல்கள் வெளியாகி உள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நம்மிடமுள்ள குறைகளை நீக்கிக் கொள்வதே நமக்கு ஏற்படக்கூடிய பெரிய அதிஷ்டமாகும்.
– கதே

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிறீதரன் எம்.பியின் கோரிக்கையை கூட்டாக வலியுறுத்த வேண்டும்

தமிழர் விடயத்தில் இந்தியா நடுநிலையாளராகச் செயற்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஏலவே, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள்; இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை தமிழ்க் கட்சிகள் ஒன்றாகச் சந்திக்க வேண்டும் எனக் கேட்டிருந்தார்.

இந்நிலையில் தமிழர் விடயத்தில் இந்தியா முதன்நிலை நடுநிலையாளராகச் செயற்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தனது கருத்தை முன்வைத்துள்ளார்.

ஆக, இந்தியாவின் வகிபாகம் இன்றி இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது ஒரு போதும் சாத்தியமாகாதென்ற உண்மையை, யதார்த்த நிலையை புரிந்தவர்கள் உணர்ந்து கொண்டுள்ளனர்.

அதேநேரம் இலங்கை சிவபூமி என திருமூலரால் போற்றப்பட்ட நாடு.

சிவபக்தனாகிய இராவணேஸ்வரன் இந்த மண்ணை ஆண்டான் என்ற வரலாறுகள் மறுக்க முடியாதவை.

இருந்தும் சிவபூமியாகிய ஈழத் திருநாட்டில் தமிழ் மக்கள் மிகுந்த அவலத்தைச் சந்தித்து வருகின்றனர்.

அவர்களின் வழிபாட்டுத் தலங்கள் கபளீகரம் செய்யப்படுகின்றன.

அதிலும் குறிப்பாக ஈழத் திருநாட்டில் இருக்கக்கூடிய சிவாலயங்களைக் கபளீகரம் செய்வதன்மூலம், இலங்கையின் ஆதிச் சமயம் சைவம் என்பதையும் ஆதிக்குடிகள் தமிழர்கள் என்பதையும் இல்லாமல் செய்கின்ற முயற்சியில் பௌத்த பிக்குகள் ஈடுபட்டுள்ளனர்.

இதற்காகவே அவர்கள் குருந்தூர்மலையில் விகாரை அமைப்பதிலும் திருகோணமலையில் விகாரை கட்டுவதிலும் களமிறங்கியுள்ளனர்.

உண்மையில் இன்றைய இந்தியா என்பது இந்து சமயத்தைப் பாதுகாக்கின்ற நாடாக இருப்பதை நாம் உணர முடியும்.

ஆம், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் G-20 மாநாட்டு மண்டபத்தில் நடராஜர் சிலையைப் பிரதிஷ்டை செய்து வைத்தார்.

அதேபோன்று சந்திரயான்–3 சந்திரனின் தென்பகுதியில் தரையிறங்கிய இடத்துக்கு **சிவசக்தி** எனப் பெயர் சூட்டியுள்ளார்.

இதுதவிர பாடல் பெற்ற மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்தின் புனரமைப்பு என்பது இந்திய மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்டது.

ஆக, இலங்கையில் சைவத்தைப் பாதுகாப்பதில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஒருபோதும் பின்னிற்க மாட்டார்.

ஆகையால் இலங்கையில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளை பிரதமர் மோடியிடம் எடுத்துக்கூற வேண்டும்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிட்டால், இலங்கையில் சைவம் முற்றாக அழிக்கப்பட்டு விடும் என்ற உண்மையை எடுத்துரைக்க வேண்டும்.

இவை தவிர, இனப் பிரச்சினைக்கான தீர்வு சாத்தியமாக வேண்டுமாயின் இந்தியா நடுநிலையாளராக செயற்பட வேண்டும் என்ற உண்மையை எடுத்துக்கூற வேண்டும்.

இந்த வேண்டுகோளை தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றாகப் பிரதமர் மோடியைச் சந்தித்துக் கேட்கும்போது அதனை இந்தியா நிச்சயம் சாதகமாகப் பரிசீலிக்கும்.

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்

# அமெரிக்கர்களும் உயிரிழந்திருப்பதால் சர்வதேச விசாரணை சாத்தியம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறுதினக் குண்டுத் தாக்குதல்களில் அமெரிக்கர்களும் உயிரிழந்திருப்பதனால் இவ் விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்றை நடத்துவதற்கான சாத்தியம் குறித்து தாம் ஆராய்வதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான தூதுவர் பெத்வான் ஸ்காக் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடருக்கு முன்பதாக உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்புக்காக ஜெனிவா சென்றிருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், அதனைத்தொடர்ந்து தற்போது அமெரிக்காவில் முக்கிய உயர்மட்ட சந்திப்புக்களில் ஈடுபட்டுவருகின்றார்.

அதன்படி கடந்த வியாழக்கிழமை வரை வோஷிங்டனில் தங்கியிருந்த அவர் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலர் டொனால்ட் லூ, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான தூதுவர் பெத்வான் ஸ்காக், அமெரிக்கத் திறைசேரி அதிகாரிகள், சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் அதிகாரிகள் மற்றும் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடனும் சந்திப்புக்களை நடாத்தியுள்ளார்.

குறிப்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான தூதுவர் பெத்வான் ஸ்காக் மற்றும் எம்.ஏ.சுமந் திரன் ஆகியோருக்கு இடையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் போது, அண்மையில் சனல்-4 செய்திச்சேவையினால் இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் வெளியிடப்பட்ட ஆவணப்படம் குறித்து விசேட அவதானம் செலுத்தப்பட்டது.

அந்த ஆவணப்படத்தின் பின்னணி மற்றும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களின் உண்மைத்தன்மை, உயிர்த்த ஞாயிறுதினக் குண்டுத் தாக்குதல்களில் அமெரிக்கர்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டவர்களும் கொல்லப்பட்டிருப்பதனால் இதனை சர்வதேச குற்றமாகக் கருதி சர்வதேச விசாரணையொன்றை முன்னெடுப்பதற்கான சாத்தியப்பாடு ஆகிய விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. (நி)

## மசகு எண்ணெயின் விலை தொடர்ந்தும் அதிகரிப்பு

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின்விலை தொடர்ந்தும் அதிகரிப்பை பதிவு செய்து வருகின்றது.

இதன்படி, டபிள்யூ. ரி. ஐ மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 90.28 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

எனினும் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை சிறு அளவிலான வீழ்ச்சியை பதிவு செய்து 93.50 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

அத்துடன் இயற்கை எரிவாயு பீப்பாய் ஒன்றின் விலையும், வீழச்சியை பதிவு செய்து 2.68 அமெரிக்க டொலராக நிலவுகிறது. (நி)

## அரசியல் மீள்பிரவேசம்; முடிவு என் கையில்

(கொழும்பு)

என் மீள் அரசியல் பிரவேசம் சிலருக்குச் சவாலாக இருக்கக்கூடும் என்பதால் பல்வேறு விதமான வதந்திகள் தற்போது வெளியாகின்றன என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷதெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வரவுள்ளார் எனவும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவர் வேட்பாளராகக் களமிறங்கவுள்ளார் எனவும் செய்திகள் வெளிவந்திருந்தன.

இது தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் தெரிவிக்கையில், என் மீள் அரசியல் பயணத்தைப் பற்றி நான் தான் முடிவெடுக்க முடியும். அதில் வேறு எவரும்தலையிட முடியாது.

நான் நாட்டை விட்டு ஓட வில்லை அரசியலுக்குப் பிரியாவிடை வழங்கவும் இல்லை. தற்போதுஓய்வில்தான் இருக்கின்றேன்.

நாட்டில் நடக்கும் விடயங்களை நாள்தோறும் அவதானித்து வருகின்றேன் என அவர் தெரிவித்தார். (நி)

## தொடருந்து விபத்து இளைஞன் உயிரிழப்பு

(அனுராதபுரம்)

அனுராதபுரத்தில் இருந்து கொலன்னாவை நோக்கி எரிபொருள் ஏற்றிச் சென்ற ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இரவு 11.15 மணியளவில் மஹவ மடபொகுன பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் மஹவ மடபொகுன பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞன் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த மரணம் தற்கொலையா அல்லது விபத்தா என பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-7)

## நாடு திரும்பவுள்ள 600 வைத்தியர்கள்

(கொழும்பு)

தங்போது வெளிநாடுகளில் பயிற்சி பெற்று வரும் சுமார் 600 வைத்தியர்கள் அடுத்த இரண்டு மாதங்களில் நாடு திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் அவர்கள் இலங்கை வந்தவுடன் பணிக்கு திரும்ப முடியும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல்ல தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வைத்தியர்கள் மற்றும் விசேட வைத்தியர்களை 65 வருடங்கள் வரை அரச சேவையில் நீடிக்க அனுமதி வழங்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என சுகாதார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சுகாதாரத் துறையில் நிலவும் வைத்தியர்கள் மற்றும் நிபுணர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

## இணையவழி முறையில் சாரதி அனுமதிப் பத்திரம்

### மோட்டார் வாகன திணைக்களத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை

(கொழும்பு)

சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடுதல் உள்ளிட்ட ஒன்லைன் முறையின் ஊடாக சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதை மோட்டார் வாகன திணைக்களத்திடம் ஒப்படைக்க இலங்கை இராணுவம் நடவடிக்கை எடுத்துள்ளது.

09 ஜூலை 2020 அன்று எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின்படி, 2021 ஜனவரி 01 முதல் இலங்கை இராணுவம் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டது.

அதன்படி, 10 லட்சத்து 22,763 சாரதி உரிமங்களும், 24 லட்சத்து 34,467 தற்காலிக சாரதி உரிமங்களும் அச்சடிக்கப்பட்டிருந்தன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மற்றும் கிழக்கில்

## பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம்

(யாழ்ப்பாணம்)

**இலங்கையின் வடக்கு கிழக்கில் பொதுவாக்கெடுப்பை நடத்துவதற்கு ஐ.நா பயன்படுத்திய வழிமுறையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை பின்பற்ற வேண்டும் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**




வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக நேற்று இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன்,13ஆவது திருத்தத்தை யாரேனும் விரும்பினால், இலங்கை நீதிமன்றத்திற்குச் செல்லவேண்டும்.

1987ஆம் ஆண்டு முதல் இலங்கை அரசியலமைப்பில் அங்கம் வகிக்கும் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கோர வேண்டும்.

13வது திருத்தம் நாட்டின் சட்டமாகும். எனவே எந்த அரசாங்கமும் அதனை நடைமுறைப்படுத்த மறுத்தால் அதனை விரும்பும் தமிழ் அரசியல் வாதிகள் நீதி மன்றத்தை நாடவேண்டும்.

இலங்கையின் நீதித்துறை அதனை அமுல்படுத்துவதில் தோல்வியடைந்தால், இலங்கை தனது சொந்த அரசியலமைப்பை மதித்து பின்பற்றவில்லை என்பதையே உலகிற்கு காட்டுகின்றது.

சிங்கள அரசியலமைப்பு எமக்கு வேண்டாம் 13 ஆவது திருத்தம் என்பது தமிழர்களின் அரசியல் தீர்வோ அல்லது தமிழர்களுக்கு உதவுவதற்காகவோ அல்ல. இந்தியா எப்போது இலங்கை மீது படையெடுக்க விரும்புகிறதோ அல்லது இலங்கைக்கு வர நினைக்கிறதோ, அப்போதெல்லாம் 13 ஆவது திருத்தம், அவர்களின் துரும்பாக இருக்கும். எனவே, பாதிக்கப்பட்டவர்களாகிய நாங்கள், இலங்கையின் வடகிழக்கில் சுதந்திர வாக்கெடுப்பு நடத்தவும், அதற்காகப் பிரச்சாரம் செய்யவும் ஐ.நாவை கோருகிறோம்.

இலங்கையின் வடக்கு கிழக்கில் பொதுவாக்கெடுப்பை நடத்துவதற்கு கிழக்கு திமோரில் ஐ.நா பயன்படுத்திய முறை மற்றும் வழிமுறையை ஐ.நா மனித உரிமைகள் பேரவை பின்பற்ற வேண்டும் என தெரிவித்தார். (நி)



கிளிநொச்சி மாவட்டத்தின் ஜெயந்தி நகர் பகுதியில் அமைந்துள்ள அகில இலங்கை கம்பன் கழகத்தின் கவிச்சக்கரவர்த்தி கம்பன் முன்பள்ளி கட்டட திறப்பு விழா நேற்றுக் காலை 10:30 மணி அளவில் கம்பன் கலை கோயில் வளாகத்தில் நடைபெற்றது. (படங்கள்- தேவானந்தன்)

### நல்லூர் உற்சவ காலத்தில் கடமையாற்றிய

## பொலிஸார், சாரணர்களுக்கான மதிப்பளிக்கும் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தில் கடமை ஆற்றிய பொலிஸார் மற்றும் சாரணர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று நல்லூர் ஆலய வளாகத்தில் இடம்பெற்றது.

வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 21 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகி நேற்றுடன் நிறைவு பெறும் நிலையில் உற்சவ காலங்களில் பாதுகாப்பு கடமை மற்றும் வீதி தடைகளில் கடமையாற்றி உற்சவ காலத்தில் பக்தர்கள் கந்தனை வழிபடுவதற்கு ஒத்துழைத்த பொலிஸார் மற்றும் சாரணர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு நல்லூர் ஆலயத்தில் சிறப்பாக இடம் பெற்றது. உற்சவ காலத்தில் கடமையாற்றியவர்களுக்காக விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெற்று காளாஞ்சியும் கையளிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ் அதிபர் யாழ்.மாவட்ட சாரண சங்கத் தலைவர் பொலிஸ் உயரதிகாரிகள் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (நி-33)

### ஆலயப் பணிக்காக

## 2 லட்சம் ரூபா பணத்தை வழங்கிய யாசகர்



(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரத ராஜப்பெருமாள் தேவஸ்தானத்தில் இருந்து நாள்தோறும் யாசகம் பெற்று வந்த கணேசன் (பாவுஜி) தான் யாசகம் பெற்று வைத்திருந்த இரண்டு லட்சம் ரூபா பணத்தை ஆலயப் பணிக்காக நிர்வாகத்திடம் நேற்று ஒப்படைத்துள்ளார். (நி)

## ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்

(முல்லைத்தீவு)

NP BHW 1451 எனும் இலக்கமுடைய மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் யாராவது இருந்தால் தகுந்த அடையாளத்தை உறுதிப்படுத்திப் பெற்றுக்கொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.

அவ்வாறு உரிமை கோரப்படாதவிடத்து 2 மாதங்களின் பின் எது விதமான முன் அறிவித்தல்கள் வழங்கப்படாது சான்று பொருள் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படும் என்பதையும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## சட்டவிரோதமாக வெளிநாடு செல்வோர் அதிகரிப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் தொழிலுக்காக வெளிநாடு செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படுவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் அவ்வாறான 2,500 வரையான சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் காமினி செனவிரத்ன குறிப்பிட்டார்.

கடந்த வருடத்தில் குறித்த எண்ணிக்கை 1900 ஆகக் காணப்பட்டது. சட்டவிரோதமாக வெளிநாடு செல்வதைத் தவிர்க்குமாறு, வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் காமினி செனவிரத்ன பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.(நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 500 | 400 |
| தக்காளி | 200 | 180 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 200 | 200 |
| கோவா | 180 | 160 | 160 | 150 |
| கரட் | 350 | 280 | 300 | 300 |
| பூசணி | 80 | 80 | 70 | 80 |
| புடோல் | 100 | 70 | 100 | 200 |
| வாழைக்காய் | 200 | 180 | 200 | 200 |
| சின்ன வெங்காயம் | 280 | 260 | 90 | 300 |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | 200 | 100-200 |
| பாகற்காய் | 450 | 400 | 300 | 400 |
| வெண்டக்காய் | 80 | 100 | 100 | 240 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 160 | 200 |
| பயற்றங்காய் | 300 | 300 | 160 | 250 |
| லீக்ஸ் | 160 | 150 | 180 | 160 |
| பீற்றூட் | 120 | 160 | 160 | 200 |
| கறிமிளகாய் | 300 | 300 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 100 | 150 |
| போஞ்சி | 400 | 450 | 480 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 130 | 150 | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 50 | 50 | 120 |
| தேசிக்காய் | 1000 | 800 | 1000 | 1600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 60-90 |
| இராசவள்ளி | 300 | 450 | 350 | 400 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 280 | 400 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 40 | 180 | 50 | 60 |
| ஈரப்பலா | 80 | 80 | 50 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழுகிய நிலை...

எப்பட்டிருந்தது.

இந்நிலையில் புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியில் தென்னம் காணியொன்றில் இருந்து துர்நாற்றம் வீசியமையால் குறித்த கிராமவாசி யொருவர் சென்று பார்த்தவேளை அழுகிய நிலையில் ஆணொருவரின் சடலம் காணப்பட்டது.

புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியைச் சேர்ந்த இராசலிங்கம் சுதர்சன் என்பவரே சடலமாக அடையாளம் காணப்பட்டுள்ளார். (ம-7,299)

## தியாகி திலீபனின்...

வைத்து மறித்த சிலர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதையடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை மாலை குறித்த வாகன ஊர்தி இடம் பெற்றபோதே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கல்முனையை நோக்கி அக்கரைப் பற்றின் ஊடாக மாலை 5 மணியளவில் பயணித்த வாகன ஊர்தியை அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலைக்கு அருகாமையில் திடீரென 7 பேர் கொண்ட ஒரு குழுவினர் இலங்கையின் தேசியக் கொடியுடன் வழிமறித்து புலிகளின் மிருகத்தனமான சித்தாந்தங்களை எமது கிழக்கு மாகாண அமைதியான சமூகத்திற்கு பிரசாரம் செய்ய அனுமதிக்கமாட்டோம்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான புலிகளின் கொடூர கொலைகளை வன்மையாக கண்டிக்கின்றோம், அக்கரைப்பற்று முஸ்லிம்களுக்கு எதிராக புலிகள் நடத்திய அட்டூழிங்களுக்கு எதிராக விசாரணை நடத்துமாறு சர்வதேசத்தையும் யு.என்.எச்.சி.ஆரையும் வலியுறுத்துகின்றோம் என சுலோகங்கள் ஏந்தியவாறும் கோஷங்கள் எழுப்பியவாறும் அசிங்கமான வார்த்தைப் பிரயோகங்களுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதையடுத்து அங்கு பதற்றம் ஏற்பட்டது.

இதனையடுத்து அங்கு வாகன நெரிசல் ஏற்பட்ட நிலையில் வாகன ஊர்தி அங்கு ஓரிரு நிமிடம் நிறுத்தி வைக்கப்பட்டதுடன் மாற்று வீதியால் வாகன ஊர்தி பயணித்து கல்முனை பாண்டிருப்பை சென்றடைந்தது. (ம-7)

## பூநகரியில்...

ஞனே உயிரிழந்தவராவார்.

மோட்டார் சைக்கிளும் கப் ரக வாகனமும் மோதுண்டதிலேயே இவ் விபத்து ஏற்பட்டது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

## வடக்கு - கிழக்கு...

ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் எழுத்துமூல அறிக்கை தொடர்பான தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், பிரித்தானிய தமிழர் பேரவை, அயர்லாந்து தமிழர் பேரவை, அமைதி மற்றும் நீதிக்கான ஒருங்கிணைப்புக்குழு, சுவிஸ்லாந்து தமிழ் நடவடிக்கைக்குழு மற்றும் அமெரிக்க தமிழ் நடவடிக்கைக்குழு ஆகிய 6 புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையிலேயே மேற்குறிப்பிடப்பட்டவாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு,

இலங்கையில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதில் நிலவும் குறைபாடு மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு உகந்த சூழல் இன்மை என்பவற்றை அடிக்கோடிட்டுக் காண்பித்து ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க் கடந்த 6ஆம் திகதி இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான எழுத்துமூல அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

உயர்ஸ்தானிகரின் அறிக்கையை வரவேற்கும் அதேவேளை, அதில் உள்ளடக்கப்பட வேண்டிய மேலும் சில விடயங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் பிரஸ்தாபிக்கப்படவில்லை.

அதேவேளை பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக நீக்குவதில் அடையப்பட்டுள்ள தோல்வி மற்றும் அச்சட்டத்தின் தொடர்ச்சியான பயன்பாடு என்பன குறித்து உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் தீவிர கரிசனை வெளியிடப்பட்டிருப்பதுடன் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தின் குறைபாடுகள் தொடர்பில் ஐ.நா விசேட அறிக்கையாளர்கள் 10 பேரின் கூட்டறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இருப்பினும் பௌத்த விகாரைகளை நிர்மாணித்தல், இந்துக்களின் வணக்கஸ்தலங்களை அழித்தல், இந்துக்கள் வழிபாடுகளில் ஈடுபடுவதைத் தடுத்தல் என்பன உள்ளடங்கலாக தமிழ்மக்கள் செறிந்துவாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல இடங்களில் இடம்பெற்றுவரும் தீவிர பௌத்தமயமாக்கலை ஆவணப்படுத்துவதற்கு உயர்ஸ்தானிகர் அலுவலகம் தவறியிருக்கின்றது.

அரச கட்டமைப்புக்களின் ஆதரவுடன் சட்டவிரோதமாக முன்னெடுக்கப்பட்டுவரும் இத்தகைய நடவடிக்கைகள் இனங்களுக்கு இடையிலான வன்முறையாக நிலைமாற்றமடையக் கூடிய அச்சுறுத்தல் காணப்படுகின்றது.

பாதுகாப்புத்துறை மறுசீரமைப்பு மற்றும் வட, கிழக்கு மாகாணங்களில் இராணுவமயமாக்கம் முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டியதன் அவசியம் என்பன தொடர்பில் உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ள போதிலும், உண்மையில் அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. அது மாத்திரமன்றி வட, கிழக்கு மக்கள் தொடர்ந்தும் மட்டுமீறிய இராணுவப் பிரசன்னத்துக்கு மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

மேலும், உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விசாரணை செயன்முறைகளுக்கு அப்பால் குமுதினி படகு படுகொலைகள் (1985), சத்துருக்கொண்டான் படுகொலைகள் (1990), குமாரபுரம் படுகொலைகள் (1996), 1983 கறுப்பு ஜூலை கலவரங்கள், பாடசாலைகள், தேவாலயங்கள் மற்றும் கோயில்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதல்கள் என்பன தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் மற்றும் ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறையை வழிநடத்தும் குழு ஆகியவற்றிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம் என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## சனல் 4...

தூதுவரிடம் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மற்றும் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான அமெரிக்காவின் தூதுவர் Betha van Schaack ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பு உலகளாவிய குற்றவியல் நீதிக்கான அமெரிக்காவின் தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டு போர் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன் தற்போது வெளியாகியுள்ள சனல் 4 ஆவணப்படம் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)


மெகா பவர்
திகதி 16/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1587
A 11 18 38 53 70
63242

தன நிதானய
திகதி - 2023.09.16
சீட்டிழுப்பு இலக்கம் - 1269
V 20 32 49 80 V
42496

Lucky 7
திகதி 16.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0065
L7 இலக்கம் 0 2
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
மகரம் 1 0 1 2 8 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3481
சீட்டிழுப்பு திகதி 16.09.2023
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
A 23 39 60 79
A 28165
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.09.16
சீட்டிழுப்பு இலக்கம் 548
கும்பம் 16 18 25 50 கும்பம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/09/16
சீட்டிழுப்பு இலக்கம் 5239
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
N 9 2 2 8 3 8
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2213 வர்ணம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.09.16 தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 14 40 47 53 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,082,836.40
செகண்ட் சான்ஸ் 35214 664
DLB

சனிதா
திகதி 2023.09.16 வெற்றி வாரம் 4374 வர்ணம் இளம் பச்சை
10 26 31 56 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,648,520.00
செகண்ட் சான்ஸ் 81673 697
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3925 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.09.16 தினம் சனிக்கிழமை
22 29 34 60 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,997,224/-
செகண்ட் சான்ஸ் 99979 329

கப்ருக
திகதி 16.09.2023 வெற்றி வாரம் 1389 வர்ணம் சிவப்பு
P 28 47 58 69 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 440,655,864.20
செகண்ட் சான்ஸ் 22828 835
தொலை பேசி: 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சம்வர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 629 திகதி 2023-09-16 வர்ணம் ஆரஞ்சு நிறம்
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 14 20 63 விதி எண் 03
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,387,376.00
DLB DEVELOPMENT LOTTERIES தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2039
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2023.09.16
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,901,800/-
07 12 45 51 Y
68732 208
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

கோழிப்பண்ணை அமைப்பதற்கான ஒருவருடமே பாவனையில் இருந்த பொருட்கள் விற்பனைக்குண்டு. 70' அடி நீளமும் 40' அடி அகலமும், 2750 கோழிகள் வளர்ப்பதற்குரிய பொருட்கள் அனைத்தும் முழுவதுமாக வாங்கும் ஒருவருக்கே விற்கப்படும்.

இப் பொருட்களைக் கொண்டு கோழிப்பண்ணை, Tution Centre அல்லது களஞ்சியங்கள் அமைக்க உதவும்.

தகரம், தண்ணீர்த் தொட்டி, Stand, Security Cameras, Water pump, அரி கற்கள், கூடுக்குரிய நெற்கள், கோழித் தீவனம், தண்ணீர் வைக்கும் கொல்கலன்கள் மற்றும் எல்லாப் பொருட்களும் ஒருவருக்கே விற்கப்படும்.

**தேவை உள்ளவர்கள் மட்டும் அழைக்கவும்**

(17074)

**இடம் : யாழ்ப்பாணம்**

**தொடர்பு : குமார் - 077 392 0797**

## இராஜ மருத்துவம்

வாதம், குத்துளைவு, பாரிசவாதம் கரப்பன், கிரந்தி, சொறி, வீக்கம், நோவு சளி, தும்மல், பீநிசம், நீரிழிவு, கொப்ப வாயு, நெஞ்சுக்குத்து, இளநரை, சொடுகு, தலைமுடி வளர்ச்சியின்மை, நித்திரையின்மைக்கு சிகிச்சை பெற

பேரறிஞர் Dr.K. பாலசுப்பிரமணியம்

சிறப்பு ஆலோசகர். 076 274 4488

(C-7266)

**வல்வை வீதி, சங்கானை**

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE



யாழ் - கொழும்பு 2,900/=

வடமராட்சி - கொழும்பு 2,700/=

(17019)

**T.P: 077 544 8503**

## மணமகள் தேவை

1993 ஆம் ஆண்டு பிறந்த சொந்த தொழில் ஸ்தாபனத்தை நடத்தி வரும் மணமகனுக்கு ஓரளவு படித்த மணமகள் தேவை

(17058)

**077 907 5491**

## வேலையாட்கள் தேவை

- காசாளர்
- சிட்டை எழுதுனர்
- தேநீர் தயாரிப்பாளர்
- உணவு பரிமாறுபவர்
- உணவு பொதி செய்பவர்

இருபாலாரும் விரும்பத்தக்கது

Rolex Hotel

340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(17045)

**077 907 9888**

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்

- கிளிநொச்சி • சுன்னாகம்
- சாவகச்சேரி • மானிப்பாய்
- நெல்லியடி • பருத்தித்துறை
- திருகோணமலை • வல்வெட்டித்துறை
- கோப்பாய் • புத்தூர்
- பண்டத்தரிப்பு • சங்கானை
- கொழும்பு

(C-7271)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7271)

0777-068-777

49A. சப்பல் லேன். யாழ்ப்பாணம்

V2 TRAVELS

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் காங்கேசன் துறையில் (K.K.S) 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. புகையிரத நிலையத்தில் இருந்து 1 Km தூரத்தில்

தொடர்புகளிற்கு (16998)

**075 521 3533**

## CANADA / AUSTRALIA Skilled Migration Visa

IELTS - Specialized Training

- தேவையான பயிற்சிகளைப் பெற்று தகுதியுடன் உறுதியான பாதுகாப்பான முறையில் வெளிநாடு செல்லலாம்
- மேலும் வெளிநாட்டில் உயர் கல்வி

(17109)

**Call - 077 768 7821**

**RM Associate Facilitators Nallur**

## மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் (RC,1985), Phd-Doctorate (கலாநிதி) பட்டம் பெற்று தனியார் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக (Medical Science) தொழில் புரியும் மண மகளுக்கு (குடும்பத்தில் ஒரே பிள்ளை) தகுந்த மணமகனை (Doctor) பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(17091)

**077 251 7450**

## வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையில் 42 ஆம் வீதியில் 3 ஆம் இல. இரண்டு அறை, குசினி, இணைந்த குளியலறையுடன் கூடிய அடுக்கு மாடி வீடு நாள், கிழமை, மாத வாடகைக்குண்டு.

(17082)

**075 278 6033**
**077 875 7860**

## மலிவு விற்பனை

SILVER SHIELD

கடந்த 40 வருடங்களாக யாழ். மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7229)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**

303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.

**021 222 5392, 076 315 6470**

## 12 வருட வெற்றிகரமான சேவையில் | JAN/2023

UK மற்றும் கனடாவில் உயர் கல்வி

குறைந்த கட்டணத்தில் இலகுவாகச் செல்லக்கூடிய நேர்வழி

எமது விசா ஆலோசனை வாயிலாக UK, கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிட முடியும்

நேரில் வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற (17080)

WEC COLLEGE

076 175 6502 / 021 720 0989

## மாடி வீடு விற்பனைக்கு

காரைநகர் இடைப்பிட்டியில் உள்ள மாடி வீட்டுடன் கூடிய 5 பரப்புக் காணியும் வீட்டுத் தளபாடங்களும் விற்பனைக்குண்டு

(17086)

**077 088 6126**
**076 645 8455**

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் இல 79 சப்பல் வீதி, மூன்றாம் குறுக்கு வீதி இரண்டும் இணையும் இடத்தில் 3 வரவேற்பறை, 8 அறைகள், 2 சமையலறை, 5 குளியலறையுடன் கூடிய கழிப்பறைகள், 2 வாகனத் தரிப்பிடம் குடி நீர் விநியோகம் (கிணறு) என்பவற்றுடன் கூடிய மாடி வீடு உண்டு.

(17078)

**077 716 6028, 077 546 7916**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 160 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.

- வீடு கட்டுவதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்.
- நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- யாழ் பஸ் நிலையம் 3 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/=)
- A-9 வீதியில் இருந்து 200 மீற்றர் தூரம்
- தரகர் தேவையில்லை
- நன்னீர் ஊற்று.

(17112)

தொடர்பு


**077 623 4204**
**076 755 8606**
**077 076 0389**

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 259/= | (max2Kg) |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 298/= | (max 2Kg) |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 432/= | (max 2Kg) |
| 1 Kg Prima கோதுமை மா | - 196/= | |
| 1 Kg கோதுமை மா | - 180/= | |
| 1 Kg றவை | - 288/= | |
| 1 Kg தீட்டல் | - 192/= | |
| 400 g அங்கர் பால்மா | - 1040/= | ~~(1080/=)~~ |
| 400 g அன்லீன் பால்மா | - 1250/= | ~~(1350/=)~~ |
| 01 அங்கர் யோகட் | - 50/= | ~~(80/=)~~ |
| 330g கோல்ட் மாரி பிஸ்கட் | - 262/= | ~~(330/=)~~ |
| 01 சந்துார் சவர்க்காரம் | - 140/= | ~~(175/=)~~ |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 360/= | ~~(430/=)~~ |

1040/=



~~1080/-~~

(17114)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

**Happy Supermarket**
**0777 8080 30**

## கொழும்பு விலையில்

யாழ்ப்பாணத்தில் கோழி மலிவு விற்பனை



- 1 Kg சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி விலை 1250/-
- 1 Kg பேரன்ஸ் சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி விலை 1250/-
- கல்பேட் சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி விலை1 Kg 1250/-
- விறாத்து கோழிக்குஞ்சுகள், சேவல், ஊர்கோழி

இவை அனைத்தும் வியாபாரிகளுக்கு. ஹோட்டல் தேவைப்படுபவர்களுக்கு விசேட விலைக் கழிவு உண்டு.

(17112)

தொடர்பு : நியு சிற்றி பாம்
நியு சிற்றி கோழிக்கடை
இல. 08, சின்னக்கடை மார்க்கெட், குருநகர், யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org